மலர்-1 இதழ்-7 டிசம்பர் 1-15 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

மாதமிருமுறை

# ஆன்மிகமலர்.காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



## பாவ புண்ணிய கணக்கு பார்க்கும் சிரவெணர்கள்

## யாகத்தால் பெய்த மழை

## சித்தர்கள் முனிவர்கள் வாசம் செய்யும்

# திருவண்ணாமலை

# ஜோதிவடிவான அருணாசலேஸ்வரர்

பஞ்ச பூத தலங்களில் திருவண்ணாமலை அக்னி தலமாக விளங்குகிறது. மேலும் கார்த்திகை தீபத்திற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த தலமாகவும் திருவண்ணாமலை விளங்குகிறது. படைக்கும் பிரம்மாவும், காக்கும் விஷ்ணுவும் யார் உயர்ந்தவர் என்று சண்டையிட்டுக் கொண்டனர். இந்த சண்டையை முடிவுக்கு கொண்டுவர சிவபெருமான் இருவரையும் அழைத்து தனது அடியையோ அல்லது முடியையோ காண்பவரே சிறந்தவர் எனக் கூறி ஜோதியாக மாறி ஓங்கி உயர்ந்து நின்றார். விஷ்ணு வராக அவதாரம் எடுத்து பூமியைக் குடைந்து அடியைக் காண முயற்சி செய்தார். பிரம்மா அன்னப் பறவையாக மாறி முடியைக் காண பறந்தார். இருவராலும் அடியையும் முடியையும் காணஇயலவில்லை.

பிரம்மா ஒரு தாழம்பூவை அழைத்து தான் முடியைக்கண்டுவிட்டதாக பொய் சாட்சி கூறச் சொன்னார். அதுவும் அப்படியே செய்தது. இதனால் கோபமடைந்த சிவபெருமான் பிரம் மாவுக்கென்று இந்த உலகத்தில் தனியே கோவில் வைக்கக்கூடாது என்றும், தாழம்பூவை பூஜைக்கு பயன்படுத்தக்கூடாது என்றும் சபித்தார்.

சிவபெருமான் பிரம்மாவுக்கும், விஷ்ணு வுக்கும் ஜோதியாக காட்சியளித்த இடமே திருவண்ணாமலை ஆகும். இங்கு காணப்படும் மலையான அண்ணாமலை க்ருதாயுகத்தில் நெருப்பாகவும். த்ரேதாயுகத்தில் மாணிக்கமாகவும், த்வப்ரயுகத்தில் தங்கமாக இருந்ததாகவும் சொல்லப்படுவதுண்டு. தற்போது கலியுகத்தில் கல்லாக உள்ளது. பிரம்மாவிற்கும், விஷ்ணுவுக்கும் சிவலிங்கமாக காட்சியளித்த இடத்தில்தான் தற்போது அருணாச்சலேஸ்வரர் கோவில் உள்ளது.

அண்ணா என்றால் ‘நெருங்கவே முடியாது’ என்று அர்த்தம். பிரம்மனாலும் விஷ்ணுவாலும் அடியையும் முடியையும் நெருங்கமுடியாத நெருப்பு மலை என்பதால் அண்ணாமலை என்ற பெயர் வந்தது.

ஒருமுறை பார்வதி திருக்கைலாயத்தில் சிவனின் கண்களை விளையாட்டாக மூடியதால் உலகம் இருளில் மூழ்கியது. இந்த தவற்றிற்காக காஞ்சிபுரத்தில் மண்ணால் லிங்கம் செய்து வழிபட்டார் பார்வதி. அச்சமயத்தில் சிவபெருமான் தோன்றி அவரை திருவண்ணாமலைக்குச் சென்று வழிபடும்படி பணித்தார். அங்குபவளக் குன்றில் கௌதம முனிவரின் உதவியோடு பார்வதி மேற்கொண்ட தவத்தை மஹிசாசுரன் என்னும் அரக்கன் தடுத்தான். இதனால் கோபமுற்ற பார்வதி துர்கை வடிவம் கொண்டு அவனைஅழித்தாள். பின்னர் சிவபெருமான ஜோதி வடிவில் பார்வதிக்கு காட்சி தந்து பார்வதிக்கு தன் உடம்பின் இடப்பக்கத்தை





தந்து அர்த்தநாரியாக மாறினார் என்றும் கூறப்படுவதுண்டு.

மொத்தம் 24 ஏக்கர் பரப்பளவில் அமைந் துள்ள இந்தக் கோவில் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்திருக்கலாம் என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

இக்கோவிலில் உள்ள ஆயிரம்கால் மண்டபத்தையும், சிவகங்கை குளத்தையும் கிருஷ்ணதேவராயரும், கிளி கோபுரத்தை கி.பி 1053ஆம் ஆண்டு ராஜேந்திர சோழ னும், பிரம்ம தீர்த்தத்தை கி.பி 1230ஆம் ஆண்டு வேணு தாயனும், வள்ளால கோபுரத்தை கி.பி 1320ஆம் ஆண்டு வள்ளால மஹாராஜாவும் கட்டியுள்ளனர்.

மேலும் இக்கோவில் உருவாக குலோத்துங்கன், ராஜேந்திரசோழன்,கோப்பெரும்சிங்கன், ஆதித்ய சோழன், மங்கையர்க்கரசி, விக்கிரமபாண்டியன், அம்மானை அம்மாள் ஆகியோரும் காரணமாக இருந்துள்ளனர். சேர, சோழ, பாண்டியர்களால் உருவாக்கப்பட்ட பெருமைக்குரியது இந்த திரு வண்ணாமலை.

பின்னர் 19 மற்றும் இருபதாம் நூற்றாண்டு களில் இக் கோவில் புதுப்பிக்கப்பட்டு 1903, 1944, 1976, 2002 ஆகிய ஆண்டுகளில் கும்பாபி







ஷேகமும் நடைபெற்றது.

பெரிய மலைக்கு நடுவே மொத்தம் ஆறு பிரகாரங்களும், ஒன்பது கோபுரங்களுடனும் பிரமாண்டமாய் காட்சியளிக்கிறது இந்தக்கோவில். கோவிலின் உள்ளே நுழைவதற்கு நான்கு கோபுரங்களும், கோவிலின் உள்ளே ஐந்து கோபுரங்களும் உள்ளன. கோவிலின் பிரதான கோபுரமான கிழக்கு கோபுரம் 217 அடி உயரமும் 11 அடுக்குகளையும் கொண்டது.

**கிரிவலம்:** இங்கு உள்ள 2668 அடி உயர மலை லிங்கம் போல் காட்சிதருகிறது. மலை யின் கீழ்த்திசையில் இருந்து பார்த்தால் ஒன்றாகவும், சுற்றும் வழியில் இரண்டாகவும், மேற்கு திசையில் மூன்றாகவும்,முடிவில் ஐந்து முகங்களாகவும் காட்சி தருகிறது இந்த மலை. இப்படி சிறப்பு வாய்ந்த இம் மலை பௌர்ணமி நாட்களில் நிலவின் ஒளி மலையில் இருக்கும் மூலிகைச் செடிகள்மீது பட்டு பிரதிபலிக்கும். அப்படி பிரதிபலிக்கும் ஒளிக் கதிர்கள் நம் உடலுக்கும் உள்ளத்திற்கும் நன்மை பயக்கும். எனவே பௌர்ணமி நாளில் கிரிவலம் வருவது சிறப்பு.

14 கி.மீ நீளமுடைய கிரிவலப் பாதையில் இந்திர லிங்கம், அக்னி லிங்கம், யம லிங்கம், நிருத்தி லிங்கம், வருண லிங்கம், வாயுலிங்கம், குபேர லிங்கம், ஈசான்ய லிங்கம் ஆகிய எட்டு லிங்கங்கள்எட்டுத் திசைகளிலும் உள்ளன. மாணிக்கவாசகரை சிறப்பிக்கும் வகையில் கிரிவலப் பாதையில் அடி அண்ணாமலையில் ஒரு கோவிலையும் காணலாம்.

**சிறப்புகள்:** காசியில் இறந்தால் முக்தி, திருவாரூரில் பிறந்தால் முக்தி, சிதம்பரத்தில் வழிபட்டால் முக்தி ஆனால் திருவண்ணாமலை நினைத்தாலே முக்தி தரும் தலம் என்று கூறப்படுகிறது.

அருணகிரிநாதர் பிறந்து வளர்ந்த இடம் திருவண்ணாமலை. அவர் தற்கொலை செய்ய முயன்றபோது முருகனே நேரில் வந்து காட்சியளித்து அவரை திருப்புகழ் பாடச்சொன்ன தலம் இந்த திருவண்ணாமலை. மேலும் ரமண மகரிஷி, சேஷாத்திரி சுவாமிகள் போன்றோரும் இடைக்காட்டு சித்தர் போன்ற சித்தர்களும் வாழ்ந்த இடம். அப்பர், ஞானசம்பந்தர், திரு நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரால் பாடல் பெற்ற தலம். மாணிக்கவாசகர் இங்கு இருந்து திருவெம்பாவையையும், திருஅம்மானையையும் இயற்றினார் என்று சொல்வர்.

மூன்றாம் பிரகாரத்தில் உள்ள ஸ்தல விருட்சமான மகிழ மரத்தின் கீழ் இருந்து பார்த்தால் கோவிலின் அனைத்து கோபுரங் களையும்காணலாம்.

அனைத்து கோவில்களைப் போல் தினமும் ஆறு கால பூஜைகள் இங்கும் நடைபெறுவதுண்டு. சித்திரை மாதம் வசந்த உற்சவம், ஆனி மாதம் பிரமோத்சவம், ஆடி பூரம், நவராத்திரி, தை மாதம் உத்திராயன புன்னிய கால பிரமோத்சவம், திருவூடல் திருவிழா,மாசி மாதம் மகா சிவராத்திரி, பங்குனி உத்திரம் போன்ற விழாக்கள் இங்கு நடைபெறுகின்றன.



## கிரிவலம் செய்ய உகந்த நேரம் மற்றும் மனதைரியம் தரும் சந்திரபகவான்

பழங்காலத்தில் திருவண்ணாமலை கிரிவலத்தை ஐந்து முறை வலம் வந்தார்களாம் (80கி.மீ) அப்படி வலம் வந்தால் மறுபிறவியற்ற நிலை ஏற்படும் என்பது நம்பிக்கை. பொதுவாக திருவண்ணாமலையை கிரிவலம் செல்ல இரவு ஏழு மணிக்கு மேல் சுற்ற ஆரம்பிக்கும் போதுதான் சந்திரபகவானின் 16 கலைகளில் இருந்து வெளிப்படும் கதிர்கள் மலையின் மீது பட்டு கிரிவலம் செல்பவர் மீது பட்டு மனதைரியத்தை உண்டாக்கும்.

## திருவண்ணாமலையை கிரிவலம் செய்யும் கிழமைகளின் பலன்கள்:

ஞாயிறுக்கிழமை சிவபதம் திங்கள் கிழமை உலகாளும் வல்லமைகிட்டும் செவ்வாய்கிழமை கடன், ஏழ்மைகள் விலகி பிறவிப் பிணியில் இருந்து விடுதலை கிட்டும் புதன் கலைகளில் தேர்ச்சி வியாழக்கிழமை ஞானிகளுக்கு ஒப்பான நிலை கிட்டும் வெள்ளிக்கிழமை விஷ்ணுபதம் கிட்டும் சனிக்கிழமை நவகிரகங்களை வழிபட்டதன் பலன் கிடைக்கும்

# சித்தர்கள் முனிவர்கள் வாசம் செய்யும் திருவண்ணாமலை

திருவண்ணாமலை மலையில் ஏராளமான சித்தர்கள் இருந்தார்கள். இப்போதும் கூட அங்கு பல சித்தர்கள் இருக்கிறார்கள். ஆனால் நம் கண்களுக்குத்தான் தெரிவதில்லை. பதினெட்டு சித்தர்களில் ஒருவரான இடைக்காடர் திருவண்ணாமலையில் ஜீவசமாதி அடைந்துள்ளார்.

திருவிடை மருதூர், இடைக்காட்டூர் உள்பட பல இடங்களில் இடைக்காடர் ஜீவ சமாதி உள்ள போதிலும் திருவண்ணாமலையில் தான் அவரது பரிபூரண அருள் உள்ளது. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்தை இவர் கோடி ஆண்டுகளுக்கு கண்டு தரிசனம் செய்துள்ளார். திருவண்ணாமலை தலத்தில் கார்த்திகை தீபம் ஏற்றப்படும் போது அதை நேரில் கண்டு தரிசனம் செய்தாலே அளவற்ற புண்ணியம் கிடைக்கும் என்பார்கள்.

கோடி தடவைக்கு மேல் கார்த்திகை தீபத்தை தரிசனம் செய்த, இடைக்காடர் பற்றி நினைத்தால், திருவண்ணாமலை ஈசனின் மகிமையைத் தெரிந்தவர் இவர் ஒருவர் தான் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். இவர் திருவண்ணாமலை பற்றிய ரகசியங்களை முழுமையாக அறிந்தவர் என்று கூறப்படுகிறது. இன்றும் பவுர்ணமி தோறும் திருவண்ணாமலையில் இடைக்காடர் கிரிவலம் வருவதாக கூறப்படுகிறது.

இடைக்காடர் மட்டுமல்ல, மேலும் பல சித்தர்களும் திருவண்ணாமலையில் கிரிவலம் வந்து கொண்டு தான் இருக்கிறார்கள். கலசப்பாக்கம் அருகில் உள்ள பூண்டியில், பூண்டி சித்தரின் ஜீவசமாதி இருக்கிறது. அந்த சித்தர் பவுர்ணமி தோறும் திருவண்ணா மலையில் கிரிவலம் வருவதாக சொல்லப்படுகிறது.

வாத்தியார் அய்யா ஸ்ரீமுத்து வடுகநாதர் சித்தர் என்று ஒரு சித்தர் உள்ளார். இவரது ஜீவசமாதி எங்கு இருக்கிறது என்று இதுவரை யாருக்குமே தெரியவில்லை. திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் உள்ள ஸ்ரீவராகி தீர்த்தத்துக்கு தினமும் இவர் வந்து வழிபட்டு செல்வதாக கூறப்படுகிறது.

சீரியா சிவம் பாக்கினி சித்தர் என்று ஒரு சித்தர் திருவண்ணாமலையில் வசித்தார். இவர் பெயரில் மலை ஒன்று அங்குள்ளது. அங்கு இந்த சித்தரின் அருள் இன்னமும் பரவி உள்ள தாக கூறப்படுகிறது.

அதுபோல ஸ்ரீபெத்த நாராயண சித்தர் என்பவரும் பல நூற்றாண்டுகளாக திருவண்ணா மலையில் வாழ்கிறார். யார் கண்களுக்கும் அவர் தன்னைக் காட்டியது இல்லை.

மேலும் வயிறு சார்ந்த நோய்கள் தீரும். திருவல்லத்தில் பிறந்தவர் பாம்பணையான் சித்தர், இவர் மற்ற சித்தர்கள் போல அரூபமாக கிரிவலம் வருவதில்லை. இவர் மனித வடிவம் எடுத்து கிரிவலம் வருகிறார். மார்கழி மாத பவுர்ணமியில் இவர் கிரிவலம் வருவதாக சொல்கிறார்கள். இவரது பார்வை நம் மீது பட்டாலே போதும் விஷக் கடிகளால் உண்டாகும் தோஷங்கள் நீங்கும்.

ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திர நாட்களில் கிரிவலம் வருபவர்களுக்கு கணதங்கணான் சித்தர் அருளால் சகல நோய்களும் தீரும். மாத சிவராத்திரி கிரிவலத்தின் போது அர்த்தஜாம பூஜை நேரத்தில் குரு ஓரையில் இவரை பார்க்கும் தரிசனம் கிடைத்தால் நமது ஆத்மா தூய்மை அடையும். இவர்களைப் போல கணக்கற்ற சித்தர் பெருமக்கள் திருவண்ணாமலையில் தினம், தினம் கிரிவலம் வந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

கிரிவலம் செல்லும் போது, இந்த சித்தர் பெருமக்களை நினைத்துக் கொண்டு நடந்தால், நிச்சயம் நல்லதே நடைபெறும்.

இதுபோன்று சித்தர்களும் முனிவர்களும் நிறைந்த இந்த சக்தி வாய்ந்த மலையை சுற்றும்போது, மிகவும் பய பக்தியுடன் செல்வது உகந்தது.

வீணான அரட்டை, தெய்வ சிந்தனை யில்லாமல் செல்வது போன்றவற்றால் அருபமாக இருக்கும் சித்தர்களின் சாபமும் ஏற்படும் என்பதால்தால் மலையை சுற்றும்போது பேசாமல் சிவ மந்திரத்தையும், சிவ நாமத் தையும் ஜெபித்துக்கொண்டு செல்ல வலியுறுத்தப் படுகிறது.

# விரதம்

வாரம் ஒரு நாளோ, மாதம் ஒரு நாளோ விரதம் இருப்பது உடலுக்கு நல்லது’ இந்தியாவில் இருக்கும் பல கோடி மக்களின் நம்பிக்கை இதுதான். ஆனால் அதில் உள்ள நன்மை, தீமைகளைப் புரிந்து கொள்ளாமலே பலர் விரதம் இருக்கிறார்கள்.

ஒரு சிலர் நோஞ்சானாக இருப்பார். “நான் இன்னைக்கு பச்சைத் தண்ணி கூட குடிக்க மாட்டேன்.. விரதம் இருக்கேன்’ என்பார். யார் யார்? எது எதற்கு? எப்படி? விரதம் இருப்பது? என்ற முறை உள்ளது. அது தெரியாமல், உடல் ஆரோக்கியத்திற்கு உலை வைக்கும் அளவிற்கு கண்மூடித் தனமாக விரதம் இருக்கிறார்கள். அது பெரிய ஆபத்தில் கொண்டு போய்விடும் என்பது இவர்களுக்கு தெரிவதில்லை.

ஒரு நாள் வயிறைக் காயப் போட்டால் உடல் உறுப்புகளில் உள்ள கழிவுகள் சுத்திகரிக்கப்படும். ஜீரண மண்டலத்திற்கு ஓய்வு கொடுத்தால் உடல் புத்துணர்ச்சி பெறும் என்பது உண்மைதான். ஆனால் அது முறைப்படி விரதம் இருப்பவர் களுக்குதான்.

## எந்த வயதினர் விரதம் இருக்கலாம்?

15 வயதுக்குக் குறைவானவர்கள், 70 வயதைக் கடந்தவர்கள், கடுமையான உடல் உழைப்பு உள்ளவர்கள், வெளியூரில் வேலை செய்பவர்கள், கர்ப்பிணிகள், நோயாளிகள் தொடர்ந்து மருந்து உட்கொண்டு வருபவர்கள் ஆகியோர் எந்த வகையான விரதமும் இருக்கக் கூடாது. விரதம் இருக்கும் போது, நம் உடலில் உள்ள உயிரி ரசாயனங்கள் வயிற்றுக்குக் கேடு விளைவிக்கக் கூடும்.

## நீண்ட நாட்கள் விரதம் இருந்தால் என்னாகும்?

நாம் உண்ணும் உணவானது முதலில் குளுக்கோஸாகவும் கொழுப்பாகவும் அமினோ அமிலமாகவும் பிரித்து எடுக்கப்பட்டு விடும். இதில் குளுக்கோஸ்தான் மிக முக்கியம். நம் உடலுக்குத் தேவையான சக்தி இதிலிருந்துதான் எடுக்கப்படுகிறத. இப்போது நீங்கள் விரதம் இருக்கிறீர்கள். சிறிது நேரத்தில் சோர்வு தட்டும். அதாவது சக்தி இழக்க நேரிடும். அந்த சக்தியை உடல் சேமித்து வைத்துள்ள குளுக்கோஸை கரைத்துத்தான் உடலானது எடுத்துக் கொள்ளும். குளுக்கோஸை தீர்ந்த பின்னர் உடலில் உள்ள கொழுப்பை எடுத்துக் கொள்ளும். இவை இரண்டும் தீர்ந்த பின்னர் அதீத பசி எடுக்கும். அப்போதும் உணவு உண்ணாமல் விரதத்தைத் தொடர்ந்தால் தசைகள் வளர்சிதை மாற்றமடைந்து, தோல் சுருங்கி முகம் வாடத் தொடங்கிவிடும்.

உடலில் எலக்ட்ரோலைட் குறைந்துவிடும். இதனால் இதயம் வேகமாகத் தாறுமாறாக துடிக்கத் தொடங்கும். சிறுநீரகம் சரிவர வேலை செய்யாமல் போய்விடும். மேலும் பட்டினி தொடர்ந்தால் மரணம் கூட சம்பவிக்கும்.

## விரதம் இருப்பது நல்லதா? கெட்டதா?

கொழுப்பையும் இரத்தத்தையும்சுத்திகரிக்க விரதம் இருப்பத நல்லது என்றே இப்போது ஆய்வில் கண்டுபிடித்துள்ளனர். மேலும் புற்றுநோய், இதய நோய், நீரிழிவு நோய், நோய் எதிர்ப்புக் குறைபாடு ஆகிய குறைகளை நிவர்த்தி செய்யலாம் என்கிறார்கள்.

## உடல் எடையைக் குறைக்க விரதம் இருக்கிறார்களே அது சரியா?

உடல் எடையைக் குறைக்க விரதம் இருப்பது சரியல்ல. உணவு சாப்பிடாத அந்த நாட்களில் அவர்கள் கோபப்படுவதும் எரிச்சலடைவதும்தான் அதிகரிக்கும் இதனால் உடலில் வளர்சிதை மாற்றம் பாதிக்கப்படுகிறது. விரதம் முடிந்த பின்னர் பசியை அடக்க அதிகளவு உணவை உண்ணத் தொடங்கிவிடுகிறார்கள். அது அவர்களை மேலும் உடல் எடையைக் கூட்ட வைக்கிறது.

## சரி, விரதம் எப்படி இருந்தால் நல்லது?

1. குறைந்தளவு உணவு அதாவது ஒருவேளை அல்லது இரு வேளை சாப்பிடாமல் விரதம் இருப்பது நல்லது. இதனால் உடலின் இன்சுலின் சுரப்பது, கொழுப்புச் சத்து குறைவது, எடை குறைவது ஆகிய நன்மைகள் ஏற்படும்.
2. மன அழுத்தம், சோர்வு நீங்க குறைந்தபட்ச அளவில் வயிற்றைப் பட்டினி போடுவது நல்லது.
3. தண்ணீர் கூட குடிக்காமல், விரதம் இருக்கக் கூடாது. உடலில் உள்ள கழிவுகளை அகற்றும் பணியை தண்ணீர்தான் செய்யும். தண்ணீர் குடிக்காமல் விரதம் இருந்தால், கழிவுகள் உடலிலேயே தங்கிவிடும்.
4. பெண்கள் மதம், பக்தி, நம்பிக்கை அடிப்படையில் அடிக்கடி விரதம் இருப்பது கூடாது. அது ரத்தசோகை நோயை உண்டாக்கும். சிலருக்கு சர்க்கரை நோய் வர அதுவும் ஒரு காரணமாகிவிடும்.
5. வாரமோ மாதமோ ஒருநாள் குறைந்த அளவு உணவை எடுத்துக் கொண்டு விரதம் இருப்பதே நல்லது. அது உடலில் சில செல்களை வளர்ச்சியடையச் செய்யும். பழுதடைந்த செல்கள் புத்துயிர் பெறும். அதனால் இளமையுடன் இருக்க முடியும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

தொகுப்பு: யஷ்வந்த் குமார்,
பில்லூர்.





# தத்தாத்ரேயர்

மார்கழி மாத பௌர்ணமி அன்று தத்தரின் அவதாரம் நடந்தது. அந்நாளை ‘தத்த ஜெயந்தி’ என கொண்டாடுகிறோம். முந்தைய யுகங்களில் தீயசக்திகளின் ஆதிக்கம் மிக அதிகமானதால் கடவுள் தத்தாத்ரேயர் மறுபடியும் அவதாரம் எடுத்து அசுரர்களை அழித்தார்.

தத்த ஜெயந்தியன்று, தத்தாத்ரேயரின் சைதன்யம் 1000 மடங்கு மற்ற நாட்களை விட அதிகமாக இந்த பூமியில் இருக்கும். அன்று கடவுள் தத்தாத்ரேயரை முழு மனதுடனும், பக்தியுடனும் யார் வழிபாடு செய்கிறார்களோ, அவர்கள் தத்த தத்துவத்தை முழுமையாக அனுபவிக்கலாம்.

**தத்தாவைப் பற்றிய அர்த்தங்கள்:** நிர்குண வடிவில் யார் ஒருவருக்கு எப்போதும் அனுபூதி தருகிறாரோ அவர் தான் தத்தா. யார் ஒருவர் தான் ஆத்மா என்பதை உணருகிறாரோ அவருக்கு நிர்குண அனுபூதி தேவைப்படுகிறது அல்லது அவர் கடவுளை அடையும் பாதையை உணர்ந்துவிட்டார் என்று அர்த்தம்.

தத்தாதத்ரேயர், அவதூதர், திகம்பரர் என்பது தத்தாவின் மற்ற பெயர்கள் ஆகும்.

**தத்தாவின் பிறப்பு வரலாறு:** அத்ரி முனிவரின் மனைவி அனுசூயாவின் பத்தினித் தன்மை எல்லோருக்கும் தெரியும். இந்த குணத்தால் அவள் மிக அதிகமான சக்தியை பெற்று இருந்தாள். இதனால் இந்திரனும் மற்ற சக்திகளும் அதிர்ச்சி அடைந்தனர். அதனால் பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரனிடம் (சிவன்) சென்று தங்கள் மனநிலையை கூறினார்கள். மும்மூர்த்திகளும் அனுசூயாவின் பத்தினி தன்மையை சோதிக்க முடிவு எடுத்தார்கள்.

ஒரு முறை அவள் கணவர் அத்ரி முனிவர் வெளியில் சென்று இருந்தார். மும்மூர்த்திகளும் மாறு வேஷத்தில் விருந்தாளி போல் வந்து அனுசூயாவிடம் பிச்சை கேட்டார்கள். அவள் தன் கணவர் அத்ரி முனிவர் வரும் வரை காத்திருக்க வேண்டினாள். ஆனால் மும்மூர்த்திகளும் தங்களுக்கு உடனே உணவு கொடுக்க கேட்டார்கள். மற்றும் அவளிடம், ‘உன் விருந்தாளிகளை அவர்கள் விருப்பம் போல் உணவு தருவாயாமே அதனால் தான் நாங்கள் இங்கு வந்தோம்’ என்று கூறினார்கள். அனுசூயாவும் அவர்கள் கோரிக்கையை ஏற்று தங்கள் விருப்பம் போல் உணவு தருகிறேன் என்று கூறினாள். மும்மூர்த்திகள் அதற்கு நீ நிர்வாணமாக எங்களுக்கு உணவு தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். அப்பொழுது அவள், ‘என் மனம் தூய்மையானது; என் கணவரின் தவம் என்னை காப்பாற்றும்’ என மனத்தால் நினைத்தாள். உடனே தன் கணவரை நோக்கி தியானித்தாள். அவள் நினைவில், வந்து இருக்கும் விருந்தாளிகள் தன் குழந்தைகள் என்ற எண்ணம் தோன்றிய உடனே மும்மூர்த்திகள் அனைவரும் அழும் குழந்தைகளாக மாறி விட்டார்கள். உடனே அவள் அந்த குழந்தைகளை கையில் எடுத்து தன் மார்பில் அணைத்து பால் கொடுத்தாள்.

வெளியில் சென்று இருந்த அத்ரி முனிவர் வந்தவுடன் நடந்ததை விவரித்தாள். அவர் வந்து இருக்கும் குழந்தைகள் மும்மூர்த்திகள் என அறிந்து கொண்டார். உடனே அவர்களை வணங்கினார். மும்மூர்த்திகளும் அமைதியாக அவர்கள் முன் தோன்றி அத்ரி முனிவர் மற்றும் அனுசூயாவிடம் என்ன வரம் வேண்டும் என்று கேட்டார்கள். அத்ரி முனிவர் மற்றும் அனுசூயா தங்களுக்கு அந்த குழந்தைகள் வேண்டும் என்று வரம் கேட்டார்கள். அவர்களும் அந்த தம்பதிகளை வாழ்த்தி விட்டு தங்களின் பயணத்தை மேற் கொண்டனர்.

சந்திரன், தத்தா, துருவா ஆகியோர் முறையே கடவுள் பிரம்மா, ஸ்ரீவிஷ்ணு, மற்றும் மகேஸ்வரர் ஆவார்கள். சந்திரனும், துருவாவும் தவம் செய்ய சென்று விட்டார்கள். தத்தா மட்டும் பூமியில் இருந்து ஸ்ரீவிஷ்ணுவின் நோக்கத்தை நிறைவேற்றினார். அதிலிருந்துதான் குரு பரம்பரை தோன்றியது.

**ஆன்மீக சாஸ்திரம்:** அத்ரி என்றால் அ + திரி என்று பகுக்கப்படும். (‘அ’ என்றால் இல்லை மற்றும் ‘திரி’ என்றால் முக்குணம் என்று பொருள்), அதனால் இந்த பெயரின் அர்த்தம் – முக்குணங்கள் இல்லாத நிலை. இதைப்பற்றித் தெரிந்து கொள்ள கீழே பார்க்கலாம் இவரிடம் மூன்று நிலைகளான விழிப்பு நிலை, கனவு நிலை, ஆழ்ந்த தூக்க நிலை இருக்காது. இவரிடம் முக்குணங்களான ஸத்வ, ரஜ, தம இருக்காது.



“ மல்லி, ரோஜா ஆகியவை தத்த தத்துவத்தை மிக அதிகமாக ஈர்க்கும் சக்தி கொண்டது. இந்த மலர்களை குறிப்பிட்ட எண்ணிக்கையிலும், வடிவத்திலும் அவர் புனித பாதத்தில் சமர்ப்பித்தால், மிக அதிகமான தெய்விக தன்மையை ஈர்க்கும் சக்தியை பெறலாம்

**கடவுள் தத்தாவின் நோக்கம்:** கடவுள் தத்தா ஸ்ரீவிஷ்ணுவின் மறுஅவதாரம். அதனால் அவரின் படைத்தல், காத்தல், மக்கள் மனதில் பக்தியை வளர்த்தல் மற்றும் மக்களுக்கு எளிமையாகவும், ஆனந்தமாகவும் வாழ சொல்லி தருவதுமாகும். தத்தாத்ரேயர், இறந்து போன நம் மூதாதையர்களுக்கு மேலே செல்லும் கதியை அருளக்கூடியவர்.

**தத்த ஜெயந்தியின் கொண்டாட்டங்கள்:** தத்த ஜெயந்தியில் குறிப்பிட்டு சொல்ல கூடிய ஆன்மீக வழிபாடு எதுவுமில்லை. ஆனாலும் கீழே வருமாறு கொண்டாடுகிறார்கள்.

தத்த ஜெயந்தி வருவதற்கு ஏழு நாள் முன்பு ஸ்ரீ குருசரித்திரம் படிப்பதை வழக்கமாக வைத்துள்ளனர்.

**தத்தரின் புகழ் பாடும் புனித நூல்:** இதே மாதிரி மற்ற பக்தி வழபாடுகள் – பஜன் பாடுவது, பூஜை செய்வது. கீழ் வரும் வழிகளில் தத்தாவிற்க்கு பூஜை செய்யப்படுகிறது.

பூஜை செய்வதற்கு முன் வலது கை மோதிர விரலால் நெற்றியில் இரண்டு நேர் கோடு போட வேண்டும். இதனால் பூஜை செய்யும் போது தத்த தத்துவம் மேல் எழுந்து ஆன்மீக அனுபூதி கிடைக்க பெற்று நம் புத்தி ஓர் நிலைப்படும்.

பூஜை செய்யும் போது வலது கை மோதிர விரலால் சந்தனமும், மஞ்சளும் மற்றும் குங்குமத்தை மோதிர விரல் மற்றும் கட்டை விரல் கொண்டு தத்தாவின் புனித பாதத்தில் இடவேண்டும். மோதிர விரலும் மற்றும் கட்டை விரலும் இணைவதால் அனாஹத சக்கரம் விழிப்படைந்து பக்தி வழியில் செல்ல உதவுகிறது.

குறிப்பிட்ட மலர்கள் மட்டும் தான் சில குறிப்பிட்ட தெய்வங்களை ஈர்க்கும். பூக்களில் மல்லி, ரோஜா ஆகியவை தத்த தத்துவத்தை மிக அதிகமாக ஈர்க்கும் சக்தி கொண்டது. இந்த மலர்களை குறிப்பிட்ட எண்ணிக்கையிலும், வடிவத்திலும் அவர் புனித பாதத்தில் சமர்ப்பித்தால், மிக அதிகமான தெய்விக தன்மையை ஈர்க்கும் சக்தியை பெறலாம். அதனால் கடவுள் தத்தாவிற்கு 7ன் எண்ணிக்கையிலும் அல்லது 7ன் பெருக்கல் எண்ணிக்கையிலும் கூம்பூ (டைமன்ட்) வடிவில் சமர்ப்பிக்க வேண்டும்.

குறிப்பிட்ட நறுமணம் மட்டும் தான் சில தெய்வங்களை ஈர்க்கும். சந்தனம், சூருபைன், லாசோனியா அல்பா மற்றும் சக்சினிபேரா போன்ற நறுமணம் தத்த தத்துவத்தை மிக அதிகமாக ஈர்க்கும். அதனால் இந்த நறுமணத்தில் செய்த ஊதுபத்திகளை ஏற்றினால் அதிகமான தத்த தத்துவத்தின் நன்மைகளை பெறலாம்.

ஆரம்ப நிலையில் இருக்கும் சாதகர்கள் இரண்டு ஊதுபத்திகளை ஒரே நேரத்தில் ஏற்றி வைத்து ஆன்மீக சாதனையை செய்யலாம். ஊதுபத்தியை வலது கையின் ஆள்காட்டி விரல் மற்றும் கட்டை விரலால் பிடித்துக் கொண்டு மூன்று முறை இடம் இருந்து வலமாக கடவுளின் படத்தின் அல்லது சிலையின் முன்னால் சுற்ற வேண்டும். தத்த சிலையின் முன்னால் ஒருவர் ஏழு முறை அல்லது ஏழின் பெருக்கல் எண்ணிக்கையில் சுற்ற வேண்டும்.

தத்த ஜெயந்தி அன்று தத்த தத்துவம் மற்ற நாட்களை விட 1000 மடங்கு அதிகமாக இருக்கும். அதனால் அன்று 12 மணி நேரம் ஸ்ரீகுருதேவதத்த என்ற நாம ஜெபத்தை சொல்லி தத்த தத்துவத்தின் முழு நன்மையை கிரகித்து கொள்ளலாம். முடிந்தால் 46 மணி நேரமும் ஜெபிக்கலாம். எவ்வளவு என்ற மணி நேரத்தை கணக்கு பண்ண முடியவில்லை என்றால் அன்று முழுவதும் ஜெபிக்கலாம்.

**தத்த ஜெயந்தியை கொண்டாடும் நடைமுறை வழிகள்:** தத்தா என்றால் நான் தான் ஆன்மா என்பதை உணருவது. நாம் எல்லோரும் நடக்கிறோம், பேசுகிறோம், சுவாசிக்கிறோம். எதனால்? நம்முள் ஆன்மா இருப்பதால். இதுவே நம்முள் கடவுள் இருப்பதற்கு சமம். ஆன்மா இல்லாமல் நாம் வாழ முடியாது. இதை நாம் உணரும் போது, எல்லோரிடமும் அன்புடன் பழகுவோம். தத்த ஜெயந்தி அன்று இதை அடைய முயற்சி செய்வோம்.

கடவுள் தத்தாவின் மறுபெயர் அவதூதர். அப்படி என்றால் நம்முள் இருக்கும் நான் என்ற அஹங்காரத்தை அழிப்பவர். 'ஹே தத்தாத்ரேயா தயவு கூர்ந்து எங்களுக்கு சக்தியையும் புத்தியையும் தந்து எங்களிடம் உள்ள அஹங்காரத்தை அழிக்க வேண்டுகிறோம்.'

கடவுள் தத்தாவின் மற்றும் ஒரு பெயர் திகம்பரர். அப்படி என்றால் எங்கும் நிறைந்தவர். எங்கும் இருப்பவர் அவரோடு ஒப்பிட்டால் நாம் ஒன்றுமில்லை. வாருங்கள், எல்லோரும் வேண்டிக் கொள்ளலாம் ஸ்ரீ 'ஹே தத்தாத்ரேயா தயவு கூர்ந்து உங்களிடம் முழுசரணாகதி அடைய எங்களுக்கு கற்றுத் தாருங்கள்.

இந்த வருடம் கார்த்திகை மாதம் 28, 13.12.2016 அன்று, தத்த ஜெயந்தி வருகிறது.

தகவல் : சனாதனின் புனித கையேடு 'தத்த', தொடர்பு : 9380949626





விளம்பரங்கள் வரவேற்கப்படுகிறது
உலகின் முதல் மெயில் புத்தகமாக வெளிவரும் நமது மாதமிருமுறை இதழுக்கு விளம்பரங்கள் வரவேற்கப்படுகிறது
முழு பக்க விளம்பரம் ரூ.5,000
அரைப்பக்க விளம்பரம் ரூ.2,500
விளம்பர ஏஜெண்ட்களுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்
மேலும் விபரங்களுக்கு
8939499598 9677159070 7299992699
நிர்வாக அலுவலகம் aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024
தவறாமல் படியுங்கள்
www.aanmeegamalar.com

# மாயையின் பிடியில் இருந்து விடுவிக்க உதவும் சூத்திரமே யோகா

யோகா என்பது மிக பெரிய வியாபாரமாக நடந்து வரும் இந்த யுகத்தில், யோகாவின் உண்மையான அம்சத்தை அனைவரும் தெரிந்து கொள்ளாமல் போனது கலியுகத்தின் அடையலாம். யோகா என்றால் என்ன என்பதை பற்றி விளக்கம் தருகிறார், தியான் பவுண்டேசன் குரு, யோகி அஷ்வினி. இவருடைய விளக்கம் அறிவு சார்ந்தது மட்டும் அல்ல, அவர் சொந்த அனுபவம் சார்ந்தது.

“எல்லா கேள்விகளுக்கான விடை நம்மை சுற்றித் தான் இருக்கிறது. நாம் அதை உள் வாங்க தயாராக இருந்தால் விடை கிடைத்து விடும். சூரியனைப் பாருங்கள். நாம் எப்போதாவது வியந்ததுண்டா?. சூரியனின் பிரகாசத்தை. சூரியனின் ஈர்ப்பை. எப்போதாவது நமக்குள் கேள்வி எழுந்ததுண்டா? எத்தனையோ கோள்களில் சூரியனுக்கு மட்டும் எப்படி இத்தனை ஆற்றல். இளமை மாறாத ஆற்றல்.

சூரியன்தான் அனைத்து ஆற்றலுக்கும் மூலாதாரம் என்று நவீன அறிவியல் கண்டுபிடித்துள்ளது. தாவரம், செடி, கொடி, மரம் அனைத்தும் சூரிய ஆற்றலை உள் வாங்குகிறது. அந்த ஆற்றல்தான் நம் உணவில் இருக்கிறது. நாம் பயன்படுத்தும் எரிபொருள் (நிலக்கரி கனிமம்) சூரிய சக்தியைக் கொண்டுள்ளது. காற்று இடம்பெயர சூரியனைச் சார்ந்து உள்ளது. சூரியன் இல்லாமல் மழை இல்லை. ஒரு தனிக் கோள் அதிதமான ஆற்றலை பாகுபாடு இல்லாமல் கொடுப்பது, எத்தனை வியப்பு.!

இத்தனை பிரம்மிப்பைக் கொண்ட சூரியனைப் பற்றி சிந்திக்க நமக்கு பெரும்பாலும் நேரம் இல்லை. நாம் நன்றி மறந்தாலும், அது தினமும் பூமிக்கு வெளிச்சம் தந்துகொண்டேதான் இருக்கிறது. சூரியன் உதிப்பதும் மறைவதும் நிற்பதே இல்லை. அது சூரியனின் இயல்பு.

சூரியனின் இயல்பை நாம் இப்படியும் சொல்லலாம். சூரியன் தன்னை இயற்கைக்கு தகுந்தாற்போல் மாற்றிக் கொண்டது. இயற்கையோடு ஒன்றிவிட்டது. இதை இன்னும் எளிமையாகச் சொல்ல வேண்டும் என்றால், சூரியன் யோக நிலையில் உள்ளது. யோக நிலை – தன்னை சுயத்தோடு ஒன்றிணைத்து பின் அந்த சுயம் பரப்ரம்மதோடு ஒன்றிணைந்த நிலை.

## எப்படி யோக நிலையை அடைவது?

பதஞ்சலி முனிவர் இதற்க்கு விடை சொல்கிறார். “யோகா சித்த விருத்தி நிரோதக”. மனதின் இயக்கத்தை நிறுத்தினால், எண்ணங்களை ஆசைகளில் இருந்து தளர்த்தலாம். அதன் பின் தெளிவு பிறந்து விடும்.

நமது சுயம் கடலில் போடப்பட்ட நாணயம் போல் என்று வைத்துக் கொள்வோம். தெளிவான நீரில் நாணயத்தைப் பார்க்கலாம். எப்போதும் அலைகளிருக்கும்கடலில்?. மனம் எண்ணங்களாலும் ஆசைகலாலும் அலைக்களிக்கப் படும்வரை நம்மால் நம் சுயத்தை காண முடியாது.

யோகா என்பது உடலைத் திருகி, வளைத்து செய்யும் உடற்பயிற்சி இல்லை. யோகா என்றால் நிலைத்தன்மை, அமைதி, அசைவுறாத் தன்மை. அத்தகைய நிலையில் தான் ஒரு யோகி தனக்குள் இறை சக்தியை உள் வாங்குவார். ஒரு யோகி அடையும் சக்தியை சொந்த காரியங்களுக்காக பயன் படுத்தமட்டார். அவருடைய கவனம் படைப்பின் மீதானது.

எப்போதாவது சூரியன் தான் செய்கின்ற உதவிக்கு உங்களிடம் எதிர்பார்த்தது உண்டா?. அப்படி சூரியன் எதிர்பார்க்க ஆரம்பித்துவிட்டால் அதன் ஆற்றலுக்கு சமமான ஆற்றலை நம்மால் திருப்பிக் கொடுக்க முடியுமா?. முடியாது.

மாயையின் பிடியில் இருந்து நம்மை விடுவிக்க உதவும் சூத்திரமே யோகா. உலகப் பற்றுகளில் நாட்டம் இருக்கும் மனிதருக்கு யோகா என்பது சாத்தியம் இல்லை. நமக்குள் அனுபவத்தை ஏற்படுத்தி, மாயையின் ஒவ்வொரு முடிச்சிகளையும் அவிழ்க்க முடிந்த ஒருவர்தான் குரு. பல நூறு யோகா குருக்களை நீங்கள் பார்க்கலாம். அவர்களுக்கு இருக்கும் கூட்டத்தைப் பார்த்து ஆச்சரியப்பட தேவை இல்லை. இதைப் படிப்பவர்களுக்கு ஒன்றை மட்டும் நினைவு செய்கிறேன். இது கலியுகம். அடுத்த முறை நீங்கள் ஒரு குருவை நாட நினைத்தால், சூரியனை நினைவுப்படுத்துங்கள். உண்மையில் அவர் யோகநெறியில் இருந்தால் சூரியனைப் போல் உள்ளொளியும் பிரகாசமும் அவரால் கொடுக்க முடியும். ஞானத்தை வழங்க ஒரு பொழுதும் அவர் உங்களிடம் பணமோ பொருளோ வாங்கவும் மாட்டார், எதிர்பார்க்கவும் மாட்டார்.”

இந்தியா முழுவதும் இலவச யோகப் பயிற்சி தியான் ஆசிரமத்தால் நடத்தப்படுகிறது

தொடர்பு கொள்ள: 9841430369.

dhyanfoundation




ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்! .காம்
1-15 டிசம்பர் 2016 13
www.aanmeegamalar.com

மற்றவர்களும் பயன்பெற
அறிமுகப் படுத்துங்கள்....

ஆன்மீக மலர் மெயில் புத்தகத்தில் இதுவரை 7,000க்கும் மேற்பட்ட அன்பர்கள் தங்களது மெயில் முகவரியை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த அனைவரின் இமெயில் முகவரிக்கு மாதம் இருமுறை நமது இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இந்த சேவையைப் பற்றி அறியாத ஆன்மீக அன்பர்களும் பயன் பெற, நமது வாசகர்கள் உதவ வேண்டும். அவர்களது இ-மெயில் முகவரியையும் பதிவு செய்ய உதவுங்கள். பதிவு செய்த அன்பர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை.

தெரியாதவர்களுக்கு நமது சேவையை தெரியப்படுத்துங்கள்.

உங்கள் மெயில் முகவரியை பதிவு செய்ய
aanmeegamalar@gmail.com
whatsapp: 7299992699





# ஆடம்பரத்திற்காக தானம் கொடுத்தால் கொடிய நரக வாசம் கிடைக்கும்



தற்போது தானம் என்பது ஏனோ தானோ என்ற முறையில் வழங்கப்படுகிறது. பணம் இருப்பவர் தனது பிறந்த தினம், மற்றும் குடும்ப விஷேச தினங்களில் வெற்று படோடபத்திற்காக குறைந்த விலையில் கிடைக்கும் எந்த பொருளையாவது ஊர் அறிய வேண்டும் என்ற நோக்கத்திற்காக மிகப் பெரிய விழாவைப் போன்று கொண்டாடி கொடுக்கின்றனர்.

அவர்கள் கொடுக்கும் பொருட்களின் மதிப்பைவிட, ஆடம்பரத்திற்கு அவர்கள் செய்யும் செலவுதான் அதிகமாக இருக்கும். மேலும் தானம் கொடுப்பதன் நோக்கம் தெரியாமல் பெயருக்காக கொடுக்கப்படும் தானம் மிகவும் வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கும், அந்த அந்த காலநிலைக்கு ஏற்ற பொருளை கொடுக்காமல் குறைந்த விலையில் அதிகமான பொருள் கிடைக்கும் என்பதால், வெயில்காலத்தில் கம்பளிப் போர்வையையும் மழைகாலத்தில் குளிர் பானத்தையும் தானமாகத் தருபவர்களும் உண்டு.

ஒருசிலர் தானம் என்ற பெயரில் ஒருசிலருக்கு, ஒருசில பொருட்களை வேண்டாவெறுப்பாக கொடுத்துவிட்டு, மற்றவர்களுக்கு தங்களது உதவியாளர் மூலம் வழங்க கூறி தனது ஆடம்பர வாழ்க்கையை மற்றவருக்கு பறைசாற்றுவார்கள்.

இதுபோன்ற வேடிக்கையான தானங்கள் எந்த வகையிலும் அவருக்கு பலனைத் தராது. மேலும் இதுபோன்ற அர்த்தமற்ற தானங்கள் கொடுப்பவருக்கு மிகக் கொடிய பாவங்கள் வந்து சேரும் என்று இந்து வேதங்கள் கூறுகிறது.

ஒருவன் மனத்தூய்மையோடு தானதர்மங்களைத் தன் கையாலே செய்வானாயின், அதனால் அவன் அடையும் பயன் என்ன? அவனுக்காக அவனுடைய மகன் முதலியோர் தான தர்மம் செயபவர்களானால்அதனால் உண்டாகும் பயன் என்ன? என்பதை வேத சாஸ்திரம் எளிமையாக கூறியுள்ளது.

மனத்தூய்மை இல்லாமலும், மனவுறுதி இல்லாமலும் (நம்பிக்கையில்லாமல்) செய்யப்படும் நூறு கோதானங்களுக்கு எத்தனைப் பயன் உண்டோ, அத்தனை பயனும் சித்த சுத்தத்தோடு சாஸ்திரங்களில் விதித்த வண்ணம் ஒரு பசுவை நல்லவர் ஒருவருக்கு தானம் செய்தால் கிடைக்கும்.

கோதானம் கொடுப்பவரும், வாங்குபவரும் மனத்தூய்மை உள்ளவராகயிருக்க வேண்டும். கற்றுணர்ந்த சான்றோருக்குக் கொடுக்கப்படும் தானம். வாங்குபவர் உத்தமராக இருக்க வேண்டும். தானம் கொடுப்பவருக்கும் வாங்குபவருக்கும் புண்ணியமுன்டாகும். வேத சாஸ்திரங்களை ஓதாமலும், ஒழுக்க வழியில் நில்லாமலும், பிராமணன் என்ற பெயரை மட்டும் கொண்டவனுக்கு தானம் கொடுத்தால், அந்த தானமே தானங் கொடுத்தவனுக்கு நரகத்தைக் கொடுக்கும்.

மேலும் தானம் வாங்குவதற்கே தகுதியில்லாதவன் தானம் வாங்குவானாயின் அவன் இருபத்தோரு தலைமுறை உள்ளவர்களோடு நரகம் புகுவான்.

ஒரு பசுவை, ஒருவருக்கு மட்டுமே தானம் கொடுக்க வேண்டும். சாதுக்களிடம் நல்லப் பொருள்களைப் பக்தி சிரத்தையோடு தானம் கொடுத்தவன், அந்தப் பிறவியிலாவது, மறுபிறவியிலாவது அதற்குரிய நற்பயனைச் சந்தேகமின்றி அடைவான்.

தானம் கொடுப்பவன் எளியவனாக இருந்தால் ஏதாவது ஒருபொருளைக் கொடுத்தாலும் போதுமானது.

– ஸ்ரீ பதி







# சங்கு, சக்கரம், நெற்றிக்கண்ணுடன் காட்சிதரும்

# ஆஞ்சநேயர்



இலங்கையில் யுத்தம் செய்து வெற்றி பெற்று சீதையை சிறை மீட்டபின், புட்பக விமானத்தில் ஏறி இராமன், சீதை, இலக்குவன், அனுமன் முதலியோர் அயோத்திக்கு திரும்பும் வழியில் பரத்வாஜ மகரிஷியின் ஆசிரமத்தில் இறங்கி விருந்துண்டனர். அப்போது வந்த வந்த நாரதர், இராமபிரானை வாழ்த்தினார்.

மேலும் அவர் இராமபிரானிடம் இராவணன் அழிந்த பின்னரும் அரக்கர் சிலர் ஆங்காங்கு இருக்கவே செய்கின்றனர். அவர்களினால் இரத்தபிந்து, இரக்கராட்சன் ஆகிய இரு வரும் மிகக் கொடியவர்கள். அவர்கள் தற் சமயம் கடலுக்கடியில் கடுந்தவம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் தவம் நிறைவடையுமானால் அவர்களும் இராவனனைப் போல் வரம் பெற்று உலகை அழித்து விடுவர், ஆதலின் உலக நன்மைக்காக அவர்களை தாங்கள் அழிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

இராமபிரான் மகரிஷியே தாங்கள் சொன்ன படி அந்த அரக்கர்களும் அழிக்கப்பட வேண்டியவர் களே ஆனால் நான் பரதனுக்கு வாக்கு கொடுத்தபடி உடனே அயோத்திக்கு திரும்ப வேண்டும். இலக்குவனும் என்னைப் பிரிந்து செல்ல மாட்டான். எனவே அந்த அரக்கர்களை அழிக்க ஆற்றலுடைய மாவீரன் ஆஞ்சநேயனை அனுப்புவோம் என்றார்.

அதனை அனைவரும் ஆமோதித்தனர். ஆஞ் சநேயரும் பணிவுடன் தன் ஒப்புதலைத் தெரி வித்தார்.

ஆஞ்சநேயர் முன்னரே அழியா வரம் பெற்றவர். அளவில்லா ஆற்றல் பெற்றவர். அட்டமா சித்தி களும் கற்றவர். எனினும் மாயாவிகளான அரக் கர்களையும் வெல்லத் திருமால் சங்கையும், சக்கரத்தையும் அனுமனுக்கு அளித்தார். பிரம்மா பிரம்ம கபாலத்தை வழங்கினார். ருத்ரன் மழுவைத் தந்தார். இராமபிரான் வில்லையும் அம்புகளையும் அளித்தார். இந்திரன் வஜ்ராயுதத்தை வழங்கி னான். இப்படி தெய்வங்கள் வழங்கிய ஆயுதங் களைத் தங்கி ஆஞ்சநேயர் பத்து கரங்களுடன் காட்சி தந்தார்.

அப்போது கருடாழ்வார் தம் இரு சிறகு களையும் அவருக்குது தந்தார். கடைசியாக அங்கு வந்த சிவபெருமான் பத்து கரங்களிலும் ஆயுதங்களுடன் நின்ற ஆஞ்சநேயரைப் பார்த்தார் தாம் என்ன தருவது என்ன சிந்தித்தார். தம்முடைய சிறப்புக்குரிய மூன்றாவது கண்ணையே அனுமனுக்கு அளித்தார்.

முன்று கண்களும் (திரிநேத்ரம்) பத்து கைகளும் (தசபுஜம்) கொண்டு வீர ஆஞ்சநேயர் அங்கிருந்து புறப்பட்டு கடலுக்கு அடியில் பதுங்கி தவம் செய்து கொண்டிருந்த இரக்கபிந்து, இரக்க ராட்சகன் ஆகிய இருவரையும் சம்காரம் செய்தார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு இராமனைச் சந்திக்க வந்தார். வரும் வழியில் கடற்கரை ஓரத்தில் இயற்கை அழகு நிரம்பியுள்ள ஓரிடத்தில் ஒய்வெடுக்க எண்ணினார். அந்த இடத்தில் இறங்கி சற்று நேரம் தங்கினார்.

அவ்வாறு அவர் ஓய்வெடுத்த சமயத்தில் அவருக்கு ஆனந்தம் மிகுந்தது, அந்த இடம்தான் அனந்தமங்கலம் ஆயிற்று.

திருக்கோயில் வரலாறு என்பது இறைவனின் வரலாறு அன்று, இறைவன் வரலாற்றுக்கு அப்பாற்பட்டு காலங்களை கடந்து நிற்பது. ஆதலில் திருக்கோயில் வரலாறு என்பது திருக்கோயில் கட்டிட வரலாறு ஆகும்.

அனந்தமங்கலத்தில் உள்ள திருக்கோயில் ஆழ்வார்களின் காலத் திற்குப் பிந்தையது. ஆதலில் இது மங்களா சாசனம் பெற்ற 108 திவ்ய தேசங்களில் ஒன்று அல்ல. சோழநாட்டின் மன்னார்குடியில் உள்ள ஸ்ரீஇராஜகோபாலப் பெருமாள் திருக்கோயிலை முதற்குலோத்துங்கச்சோழன் எழுப்பி உள்ளான். ஆதலின் அத்திருக்கோயில் குலோத்துங்க சோழ விண்ணகரம் என்னும் பெயரில் விளங்குகின்றது. அத்திருக்கோயிலும் ஆழ்வார்களால் பாடப் பெற்றதன்று எனினும் ஆழ்வார்களுக்குப் பின்னர் வந்த ஆச்சார்யர்கள் அத்திருக்கோயிலைப் போற்றி வழிபட்டுள்ளனர்.



புகழ் பெற்ற அத்திருக்கோயிலைப் போல தங்கள் ஊர்களிலும் பலர் அதே பெயரில் திருக்கோயில் எழுப்பியுள்ளனர்.

விஜயநகர மன்னர்கள் காலத்தில் வாழ்ந்த மண்டலத் தலைவர் ஒருவர் அனந்தமங்கலத்தில் இராஜகோபால சுவாமிக்கு திருக்கோயில் கட்டியுள்ளார்.

மன்னார்குடி திருக்கோயிலில் மூலவராக எழுந்தருளியுள்ள ஸ்ரீதேவி பூதேவி உடனாகிய வாசுதேவப் பெருமாளை இங்கும் எழுந்தருளச் செய்துள்ளார். மன்னார்குடியில் உள்ளது போலவே இங்கும் தாயாருக்கு செங்கமலவல்லித் தாயார் என்றே திருநாமம் மன்னார்குடியில் உள்ளது போன்றே கருவறையில் எழுந்தருளியுள்ள உற்சவருக்கு இராஜகோபாலப் பெருமாள் என்றே திருப்பெயர். அவர் பெயரால் திருக்கோயில் வழங்கி வருகின்றது. இத்திருக்கோயிலின் பரிபாலனத்தை ஆச்சார்ய புருஷர்கள் (குருமார்கள்) நடத்தி வந்தனர்.

அனந்தமங்கலம் ஸ்ரீதிரிநேத்ர தசபுஜவீர ஆஞ்சநேயரை வழிபட்டால் திருமால், சிவ பெருமான், பிரம்மா, இராமர், இந்திரன், ருத்ரன், கருடாழ்வார் ஆகிய அனைவரையும் வழிபட்ட பயன் கிடைக்கும்.

சிரஞ்சீவிகள் எழுவரில் ஒருவராகிய அனுமனை வழிபட்டால் நீண்ட ஆயுளைப் பெறலாம். ஆங்சநேயர் வழிபாட்டினால் அறிவு கூர்மையாகும். உடல் வரிமை பெருகும். மன உறுதி ஏற்படும். அச்சம் அகலும், நோய் நொடிகள் விலகும், தெளிவு உண்டாகும். வாக்கு வனமை வளமாகும்.

மார்கழி மாதம் மூல நட்சத்திரத்துடன் கூடிய அமாவாசை ஆஞ்சநேயருக்கு அவதாரத்திருநாள். அன்று வழிபடுவது மிகவும் சிறப்பு. வெற்றிலை மாலை, துளசி மாலை, வடைமாலை, எலுமிச்சம் பழ மாலை ஆகியன அனுமனுக்குப் பிரியமான வைகளாகும். வெண்ணெய் சாற்றி வழிபட்டால் நமது துன்பங்கள் அனைத்தும் வெண்ணெய் போல் கரைந்து போகும். ஆஞ்சநேயரின் வாலின் நவக்கிரகங்கள் ஐக்கியமாகி உள்ளதால் அவரை வழிபட நவக்கிரகங்கள் பாதிப்புகள் ஏற்படாது.

இத்திருக்கோயில் மயிலாடுதுறை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் நிர்வாகத்தில் உள்ளது. திருக்கோயில் ஆறுகால பூஜை நடைபெற்று வருகின்றது. அமாவாசை தோறும் ஆஞ்சநேயருக்கு திருமஞ்சனம், திருவாராதனங்களுடன் சிறப்பாக வழிபாடு நடைபெற்று வருகின்றது.

மார்கழிமாதம் அமாவாசையின்போது அனுமத் ஜெயந்தி விழா மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இத்திருக்கோயிலின் கருவறையில் உள்ள மூலவர் ஸ்ரீதேவி, ஸ்ரீபூதேவி உடனாகிய ஸ்ரீவாசுதேவப் பெருமாள் ஆவார். இம்மூலவருக்கு அருகே எழுந்தருளியுள்ள உற்சவர் ஸ்ரீஇராஜகோபாலப் பெருமாள் ஆவார். இவர் ருக்மணி, சத்யபாமாவுடன் சேவை சாதிக்கிறார்.

கருவறையில் ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீசந்தான கோபலன், யாாகபேரர், தீர்த்த பேரர், பலிபேரர் ஆகியோர் உள்ளனர். பரிவார சன்னதி ஒன்றில் ஆழ்வார்களும், மற்றொன்றில் ஆச்சாரியர்களும் எழுந்தருளியுள்ளனர்.

தனிச்சன்னதியில் கிழக்கு நோக்கி அமர்ந்த கோலத்தில் சேவை வாதிக்கும் தாயாருக்கு ஸ்ரீசெங்கமலவல்லித் தயார் என்று திருநாமம்.

தனிக்கோயிலில் வடக்கு முகமாக உள்ள மூலவராகிய ஆஞ்சநேயர் நான்கு கரங்களை உடையவர். சங்கு, சக்கரம், சாட்டை, நவநீதம் ஆகியவற்றை தாங்கிய வண்ணம் இவர் தரிசனம் தருகிறார். இவரது உற்சவத்திருமேனி திருக்கோயிலின் உள்ள தசபுஜவீர ஆஞ்சநேயருக்கு அருகில் இடதுபுறமாக எழுந்தருளச் செய்யப் பெற்றுள்ளது.

தனிக்கோயிலில் எழுந்தருளியுள்ள சதுர்புஜ ஆஞ்சநேயருக்கு அருகில் இடது பக்கத்தில் ஸ்ரீ பூமிதேவித்தாயார் எழுந்தருளியுள்ளார். திருக்கோயிலின் உள்ளே உள்ள ஸ்ரீதிரிநேத்ர தசபுஜ வீர ஆஞ்சநேயர் மூன்றுகண்களையும், பத்து கரங்களையும் உடையவர். சங்கம், சக்கரம், சூலம், கபாலம், மழு, பாசம், வில், அம்பு, சாட்டை, நவநீதம் ஆகியவற்றை கரங்களில் ஏந்தி முதுகின் இருபக்கங்களிலும் கருடனுக்குரிய சிறகுகளோடு எழுந்தருளிக் காட்சி தருகின்றனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள தரங்கம்பாடி வட்டத்தில் உள்ளது. அனந்தமங்கலம் என்னும் சிற்றூர். சிதம்பரம் தொடங்கி சீர்காழி, திருக்கடையூர். தரங்கம்பாடி காரைக்கால் வழியாக நாகப்பட்டினம் வரை செல்லும் நெஞ்சாலையில் திருக்கடையூருக்கும், தரங்கம்பாடிக்கும் இடையே உள்ளது அனந்தமங்கலம்.

அனைத்துவித ஜோதிட
பரிகாரங்களுக்கும் தொடர்புகொள்ளவும்
ஸ்ரீ அம்பாள் உபாசகர்
A.R.R. சுதர்சன ஐயங்கார், திருச்சி 17
போன் 9840369513

# மனிதர்களை மிருகமாக்கும் 21 குணங்கள்

நல்ல மனிதர்களையும் 21 வகையான கெட்ட குணங்கள் தீயவனாக்குவதாக வேதங்கள் கூறுகின்றன. அவைகள்:

1. தற்பெருமை கொள்ளுதல்
2. பிறரைக் கொடுமை செய்தல்
3. கோபப்படுதல்
4. பிறரைப் போலவே வாழ ஆசைப்பட்டு, அதற்கேற்ற பாவனை செய்தல்.
5. பிறர் துன்பத்தைக் கண்டு சந்தோஷப்படுதல்
6. பொய் பேசுதல்
7. கெட்ட சொற்களைப் பேசுதல்
8. நல்லவர் போல் நடிக்கும் இரட்டை வேட மனப்பான்மை
9. புறம்பேசுதல்
10. தகாதவர்களுடன் சேருதலும், ஆதரவு கொடுத்தலும்
11. பாரபட்சமாக நடத்தல்
12. பொருத்தமற்றவர்களைப் புகழுதல்
13. பொய்சாட்சி கூறுதல்
14. எளியோரையும், வலிமை குறைந்தோரையும் கேலி செய்தல்
15. வாக்குறுதியை மீறுதல்
16. சண்டை, சச்சரவு, வாக்குவாதம்செய்தல்
17. குறை கூறுதல்
18. வதந்தி பரப்புதல்
19. கோள் சொல்லுதல்
20. பொறாமைப்படுதல்
21. பெண்களை தீய நோக்குடன் பார்த்தல்.






# நான்கு வேதங்களும் ராகுவும் வழிபட்ட நாகநாதர் ஆலயம்

நாகை மாவட்டம் திருக்குவளை வட்டம், திருமணச்சேரி (மாராச்சேரி)யில் அமைந்துள்ளது அருள்மிகு ஸ்ரீ சுந்தரநாயகி சமேத நாகநாதர் ஆலயம் இத்திருக்கோயில் சுமார் 900 வருடங்களுக்கு முந்தையதாக கூறப்படுகிறது. இத்தலத்து சிவபெருமானின் பெயருக்கு ஏற்றார் போல (நாகநாதர்) நாகங்கள் மிகுந்து காணப்படுகிறது. ஆனாலும் மக்களை ஒன்றும் செய்வதில்லை. மூலவர் சன்னதிக்கு எதிரே நந்திதேவர் உள்ளார்.

சுற்று பிரகாரங்களில், ஆகாசலிங்கம், பைரவர், பஞ்சலிங்கம் (தற்போது ஒரு லிங்கம் மட்டுமே உள்ளது) அக்கால கலை நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்தலம் ராகுகால பூஜைக்கு மிகவும் பிர சித்தி பெற்றதாக விளங்கியிருக்கிறது. இராகு பகவான் இத்தல சிவபெருமானை வணங்கி பாப விமோசனம் பெற்றதாக கூறப்படுகிறது. இதனால் இராகுகாலபூஜை முற்காலத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

நான்கு வேதங்களும் வழிபட்ட திருத்தலம், வருடந்தோறும் சூரியன் வழிபடும் திருத்தலம் (பங்குனி 4 முதல் பங்குனி 8 வரை) ஆவுடையார் கோவிலில் பைரவருக்கு நடந்த திருவிளையாடலில் அவரின் வாகனம் காணாமல் போய் திருமறைச்சேரியில் கிடைத்ததாக ஐதீகம். இதனால் தன் உடமைகள் காணாமல் போனால் திருமணச்சேரி நாகநாதரிடம் வந்து முறையிட்டால் கிடைக்குமென்பது பக்தர்களின் நம்பிக்கை.

அதே போன்று மகா சிவராத்திரியில் மூன்றாவது கால பூஜையில், சிவபெருமானுக்கு பயன்படுத்தப்படும், கைலாயத்தில் மட்டுமே விளையக்கூடிய சிவ கரந் தை எனப்படும் வாசனை நிரம்பிய செடி, கைலாயத்தை அடுத்து திருமறைச்சேரியில் மட்டுமே உள்ளது என்பது இவ்வாலயத்திற்கு மேலும் சிறப்பை கூட்டுகிறது.

இவ்வளவு சிறப்புகளைப் பெற்ற நாகநாதர் ஆலயம் தற்போது மிகவும் பாழடைந்த நிலை யில் திருக்கோயில் சுவர்கள் இடிந்து விழும் நிலையில் உள்ளதை பார்க்கும்போது மிகவும் வேதனையாகவும், வருத்தமாகவும் உள்ளது.

4 ஆண்டுகளுக்கு முன்பு இத்திருக்கோவி லுக்கு உழவாரப்பணி செய்ய வந்த முத்துக்குமாரன் என்பவர் தனது ஆன்மீக நண்பர்களுடனும், ஊர் மக்களின் உதவியுடனும் இத்திருக்கோயிலை சுத்தம் செய்து, விஷேச தினங்கள் மற்றும் பிரதோஷம் போன்ற நாட்களில் மட்டும் பூஜை செய்ய முடிவு செய்து அதன்படி ஊர்மக்களின் உதவியுடன் பூஜை செய்து வந்துள்ளனர். தற்போது இத்திருக்கோயிலை பழமை மாறாமல் புதுப்பிக்க முடிவு செய்து பாலாலயம் செய்யப்பட்டு இரண்டு கால பூஜையுடன் துவக்கியுள்ளனர். இத்தலத்து சிவபெருமானின் அருளும் ஆன்மீக அன்பர்களிடமிருந்து பொருளுதவியும் கிடைத்தால் இத் தலத்தை பழமை மாறாமல் மீண்டும் புதுபொலிவு பெறும் என்று ஊர் மக்களும் ஆன்மீக அன்பர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் விவரங்களுக்கு
ப.முத்துக்குமரன், திருவாரூர் மாவட்டம்
தொலைபேசி எண்
9840063124 / 9047467639










# எமனாலும் சித்திரகுப்தனாலும் கனிக்க முடியாத பாவ-புண்ணிய கணக்கை கணிக்கும்

# சிரவணர்கள்

மனிதர்களின் பாவ புண்ணிய கணக்கை கணித்து கூறவும், மனிதர்களின் மனதாலும், உடலாலும் செய்யும் செயலுக்கு ஏற்ப பலா பலனை வழங்கும் ஆற்றல் எமதர்மராஜனுக்கோ, சித்திர குப்தனுக்கோ கிடையாது.

மேற்கண்ட பாவ புண்ணியத்தை அறிந்து கூறும் ஆற்றல் படைத்தவர்கள்தான் சிரவணர்கள் என்று அழைக்கப்படும் பன்னிருவர்.

பிரளய காலம் எனப்படும் ஊழிக்காலத்தில் மகா விஷ்ணு அனைத்து தேவர்கள் மற்றும் இறை சக்திகளையும் தன்னுள் ஒடுக்கிக் கொண்டு நீண்ட வருடங்கள் பள்ளி கொண்டிருந்தார்.

ஊழிக்காலம் மெல்ல மறையத் துவங்கியது, அப்போது மகா விஷ்ணுவின் உத்திகமலத்தில் நான்முகனாகிய பிரமன் தோன்றி, ஸ்ரீ ஹரியைக் குறித்து நெடுங்காலம் மாதவம் புரிந்து வேதங்களையும் படிக்கத் துவங்கினார். அவ்வாறு படித்தவுடனேயே உருத்திரன் முதலிய தேவர்கள் எல்லாரும் மாகவிஷ்ணுவின் கட்டுப்பாட்டில் இருந்து வெளியேறி, அவரவர் தொழில்களைச் செய்யத் துவங்கினார்கள்.

அந்த சமயத்தில் யமதர்மராஜனும் ஜைமினி என்ற நகரத்தை அடைந்து சிம்மாசனத்தில் அமர்ந்து தனது தொழிலை துவங்க ஆரம்பித்தார். ஜீவன்கள் செய்யும் பாப புண்ணியங்களை அறிய வேண்டும் என்று ஆராய்ந்தார்.

எவ்வளவோ முயற்சி செய்து ஜீவர்கள் செய்யும் பாவ புண்ணியங்களை அவரால் அறிந்து கொள்ள முடியவில்லை. பல காலம் முயன்றும் அவரால் அந்தச் செயலில் வெற்றியடைய முடியவில்லை. எனவே யமதர்மராஜன் மனம் வருந்தி பிரம்மாவைத் தேடிச் சென்று “ஜீவர்கள் செய்யும் பாவ புண்ணியத்தை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை, அதனால் ஜீவன்களுக்கு உண்டான பாப, புண்ணியத்தின் பலனை கொடுக்க முடியவில்லை” என்று தனது தவிப்பை தெரிவித்தார்.

எமதர்மராஜனின் தவிப்பை உணர்ந்து கொண்ட பிரம்மன் ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்தெறிந்து, நீண்ட கண்களை உடையவர்களும் மிக்க மேனியசகுடயவர்களும் மனக்கண்ணால் யாவற்றையும் அறிந்து கொள்ளக் கூடியவர்களான பன்னிரண்டு புதல்வர்களைப் படைத்தார்.

பின்னர் யமதர்மனைப் பார்த்து

“எமதர்மனே! உலகத்தில் பிறந்த ஜீவர்கள் அனைவரும் நினைப்பதையும் பேசுவதையும் செயல்புரிவதையும் உணர்ந்தறிய வல்லவர்கள். இவர்கள் ஜீவர்கள் செய்வதை எல்லாம் அறிந்து உனக்கு அறிவிப்பார்கள். நீ பாப புண்ணியங்களை அறிந்து அதற்குறிய பலன்களை ஜீவர்களுக்கு கொடு” என்று சொல்லி, அப்பன்னிருவரையும் யமதர்மனுடன் செல்லும்படிப் பணித்தார்.

அந்தப் பன்னிருவரும் பிரமனை வணங்கி எமதர்மராஜனுடன் ஜைமினி என்ற நகரத்தை அடைந்தனர். அந்தப் பன்னிருவரைத்தான் வேத சாஸ்திரங்கள் சிரவனர் என்று குறிப்பிடுகிறது.

காலதேவனால் நிச்சயிக்கப்பட்ட தீவாய் நரகங்கள் எண்பத்து நான்கு லட்சமிருக்கின்றன. அவற்றில் கொடிய நரகங்கள் 28 இருகின்றன.

ஜீவர்கள் பூவுலகில் வாழ்ந்த காலத்தில் செய்த பாப புண்ணியங்களை எல்லாம் சித்திர குப்தன் என்ற யம லோக கணக்கன் சிரவணர்களின் மூலமாக அறிந்து யம தர்மராஜனுக்கு அறிவிப்பார்.

மனிதர்களின் பூலோகத்தில் செய்த புண்ணிய செயலுக்கு ஏற்பவும், பாவங்களின் தன்மைக்கேற்பவும் தண்டனை வாசித்துச் சொல்ல யமதர்மன் தன கிங்கர்களைக் கொண்டு அத்தண்டனைகளை அவ்வவ்போதே நிறைவேற்றிச் செய்து விடுவான். ஜீவனானவன் வாக்கால்செய்தபாவங்களைவாக்காலும்,உடலால் செய்த பாவப் புண்ணியங்களை உடலாலும் மனத்தால் செய்த பாவப் புண்ணியங்களை மனத்தாலும் அனுபவிக்க வேண்டியிருக்கும். பெரியோரை இகழ்ந்து நீச மொழிகளால் ஏசிபேசினால் பாவங்கள் உண்டாகி வாயிலிருந்து புழுக்களாக சொரியும். புண்ணியங்களை மட்டும் செய்தவர்கள் நல்ல சரீரத்தோடு நோய் இன்றி இன்பமாக வாழ்வார்கள். பிறவுயிர்களை வாட்டி வதைத்தவர்கள் கொடூரமான சரீரத்தை அடைந்து துன்புறுவார்கள்.

மேற்கண்டவாறு உலக உயிர்களின் உடல் மற்றும் மனதால் செய்யும் அனைத்தையும் அலசி ஆராயும் தன்மை பெற்ற சிரவணர்களுக்கென்று தனிப்பட்ட எந்தவித வழிபாடும் இந்து மதத்தில் இதுவரை வகுக்கவில்லை.

## அறிய வேண்டிய ஆன்மிக செய்தி

❖ நெருப்பை வாயினால் ஊதக்கூடாது.

❖ செவ்வாய், வெள்ளிக் கிழமைகள், சதுர்த்தி, சதுர்த்தசி, சஷ்டி, பௌர்ணமி, நவமி ஆகிய திதிகளில் முடிவெட்டுதல் கூடாது ஆனால் அந்தத் திதி அமையும் நாள் ஞாயிறு அல்லது வியாழனாயிருந்தால் மேற்படிதிதி தோஷம் இல்லை.

❖ அசுத்தமான பொருள்களை நெருப்பில் போடக்கூடாது. அத்துடன் துடிதுடிக்கப் புழுபூச்சிகளை நெருப்பில் போடு வது பிரம்மகத்திதோஷத்தை உண் டாக்கும்.

❖ ஆலயத்தில் இரவுநேரத்தில் குளிக்கக் கூடாது. கங்கையில் மட்டும் எந்த நேரமும் குளிக்கலாம். ஈரத்துணியைத் தண்ணீரில் பிழியக்கூடாது, உதறக்கூடாது

❖ தண்ணீரிலும், எண்ணெய்யிலும் நம் நிழலை நாம் பார்க்கக்கூடாது.

❖ உண்ணும்போது முதலில் இனிப்பையும், முடிவில் கசப்பையும் உண்ணவேண்டும்.

❖ உறவினர்களை ஊருக்கு அனுப்பிவிட்டு உடனே எண்ணெய் தேய்த்து நீராடக் கூடாது.





# விநாயகரின் வாகனமான மூஷிகனின் அற்புதமான வரலாறு

விநாயகப் பெருமானின் மீது அதிகமான அன்பும் பக்தியும் கொண்டவன் கிரவுஞ்சன் என்ற கந்தர்வன், இமயமலையின் அழகை ரசித்துக் கொண்டு வானில் பறந்து கொண்டிருந்தான் கிரவுஞ்சன், அந்த சமயம் அருகில் இருந்த பூந்தோட்டத்தில் பூத்துக் குலுங்கியிருந்த மலர்களை ரசித்தவண்ணம் செல்லும் போது, அங்கு அழகிய மங்கை ஒருவள் பூப்பறித்துக் கொண்டிருப்பதை கவனித்தான். அந்த மலர்களைவிட அந்த பெண் மிகுந்த அழகாக இருந்ததால் அவள் மீது மோகம் கொண்டான்.

அந்தப் பெண்ணுடன் பேசி, அவளை எப்படியாவது திருமணம் செய்து, தன்னுடன் தேவலோகத்துக்கு அழைத்துச் சென்று விட வேண்டுமென்று எண்ணினான்.

பூப்பறித்துக் கொண்டிருந்த பெண்ணை நெருங்கி, ‘‘பெண்ணே, தேவலோகத்தைச் சேர்ந்த கந்தர்வனான நான் வான் வழியாகச் சென்று கொண்டிருந்த போது, உன் அழகைக் கண்டு மயங்கிக் கீழிறங்கி வந்தேன். உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்’’ என்றான்.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அந்தப் பெண், ‘‘கந்தர்வனே, நான் சவுபரி முனிவரின் மனைவி மனோரமை. என் மேல் நீ கொண்ட தவறான எண்ணத்தை மாற்றிக் கொண்டு, இங்கிருந்து சென்றுவிடு’’ என்று எச்சரித்தாள்.

ஆனால் காமத்தின் பிடியில் அகப்பட்டுக் கொண்ட அந்த கந்தர்வன், ‘‘நீ ஒரு முனிவரைத் திருமணம் செய்து கொண்டு, ஒரு பணிப்பெண்ணைப் போல் வாழ்ந்து துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறாய். என்னைத் திருமணம் செய்து கொண்டால் மிகவும் மகிழ்ச்சியாக வாழலாம்’’ என்று ஆசை வார்த்தைகளை கூறினான்.

அதைக் கேட்டுக் கோபமடைந்த அவள், ‘‘நான் இன்னொருவரின் மனைவி என்று சொல்லியும், அதைக் கேட்காமல் என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைப்பது உனக்குத் தவறாகத் தெரியவில்லையா?’’ என்றாள்.

‘‘இதிலென்ன தவறு இருக்கிறது? முனிவருடன் இருப்பதை விட, என்னைப் போன்ற கந்தர்வனுடன் இருப்பதில்தான் இன்பம் அதிகம். இந்த முனிவரைக் கைவிட்டு என்னுடன் வந்தால், உன்னைத் தேவலோகம் அழைத்துச் செல்கிறேன். அங்கு நாம் இருவரும் மகிழ்ச்சியாக வாழலாம்’’ என்று கூறியவன், மனோரமையை நெருங்கினான்.

காமத்தின் வலையில் அகப்பட்ட அவனின் எண்ணத்தை அறிந்த முனிவரின் பத்தினி மனோரமை, அவனிடமிருந்து தப்பிக்க ஆசிரமம் நோக்கி ஓடினாள்.

பின் தொடர்ந்து வந்த கந்தர்வன், ஆசிரமத்துக்குள் நுழைந்த மனோரமையின் கையைப் பிடித்து நிறுத்தினான். இதைச் சிறிதும் எதிர் பார்க்காத அவள், ‘‘சுவாமி! என்னைக் காப்பாற்றுங்கள்’’ என்று சத்தமிட்டாள். மனைவியின் சத்தத்தைக் கேட்டு ஆசிரமத்திலிருந்து வெளியில் வந்தார் சவுபரி முனிவர்.

நிலையை உடனடியாக புரிந்து கொண்ட முனிவர், ‘‘கந்தர்வனே! என் மனைவியை விட்டு இங்கிருந்து போய்விடு. இல்லையெனில் என் கோபத்துக்கு ஆளாவாய்’’ என்று கூறினார்.

காம மயக்கத்தில் இருந்த கந்தர்வனுக்கு அவரது குரல் கூட காதில் விழவில்லை, அவன் மனோரமையை கவர்ந்து செல்வதிலேயே குறியாக இருந்தான். இதனால் கோபமடைந்த முனிவர், ‘‘கந்தர்வனே! என் மனைவியை கவர்ந்து செல்ல நினைத்த நீ, மண்ணைத் தோண்டி வளையில் ஒளிந்து வாழும் எலியாக மாறி துன்பப்படுவாய்’’ என்று சாபமிட்டார்.

முனிவரின் சாபத்தைக் கேட்டு சுயநினைவுக்குத் திரும்பிய கந்தர்வன் தன்னுடைய செயலுக்காக வருந்தினான். ‘‘முனிவரே! அடுத்தவரின் மனைவியை அடைய நினைத்த எனக்கு, தாங்கள் கொடுத்த சாபம் சரியானதுதான். நான் நீங்கள் கொடுத்த சாபத்தை அப்படியே முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். இருப்பினும், எனது தவறைத் தாங்கள் மன்னித்தருள வேண்டும்’’ என்றான்.

இதனால் மனமிரங்கிய முனிவர், ‘‘கந்தர்வனே! தவறு செய்வது அனைவரின் இயல்பாக இருக்கலாம். ஆனால், தேவலோகத்தைச் சேர்ந்த உனக்கு இப்படியொரு எண்ணம் வந்திருக்கவே கூடாது. நீ தவறை உணர்ந்து, நான் கொடுத்த சாபத்தையும் முழுமையாக ஏற்றுக் கொண்டிருப்பதால் நான் உன்னை மன்னிக்கிறேன். பிற்காலத்தில் உனக்கு இந்த எலி உருவத்திலேயே மிகப்பெரிய சிறப்பு கிடைக்கும்’’ என்றார்.

முனிவரின் சாபத்தினால் கந்தர்வன், மிகப் பெரிய எலியாக மாறினான். அந்த எலி காட்டிற்குள் சென்று பல இடங்களையும் தோண்டி நாசப் படுத்திக் கொண்டிருந்தது. ஒவ்வொரு இடமாக மாறி, மாறிச் சென்ற எலி, காட்டிற்குள் இருந்த பராசர முனிவரின் ஆசிரமப் பகுதிக்குள் சென்றது. அந்த இடம் பிடித்துப் போனதால், அங்கேயே ஒரு வளை தோண்டித் தங்கிக்கொண்டது.

அந்த எலி ஆசிரமப் பகுதிக்குள் இருந்த மரங்களின் வேர்களைக் கடித்து, மரங்களைக் கீழே விழச் செய்து அங்கிருந்தவர்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தது. மேலும், ஆசிரமத்தின் பல பகுதிகளிலும் வளை தோண்டி சேதப்படுத்தியது.

காலம் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. இந்த நிலையில், அபினந்தன் எனும் அரசன், தன்னுடைய பதவியும், அதனால் கிடைக்கும் சிறப்பும் நீடித்திருக்க வேண்டும் என்று மிகப்பெரிய வேள்வி ஒன்றை நடத்த முடிவு செய்தான். வேள்விக்கான பணிகளையும் அவனே முன்னின்று செய்து வந்தான். இந்த வேள்வி முழுமையாக நடந்து முடிந்து விட்டால், அந்த அரசனுக்கு இந்திரப் பதவி கிடைத்தாலும் கிடைத்து விடுமென்று நினைத்து இந்திரன் அச்சமடைந்தான்.

எனவே தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, அபினந்தனை வேள்வி செய்ய விடாமல் தடுக்க இந்திரன் முடிவு செய்தான்.



இதற்காக காலநேமி என்ற அரக்கனை பூலோகத்திற்கு அனுப்பிவைத்தான். அந்த அசுரன், அபினந்தன் செய்து வந்த வேள்விகளை எல்லாம் அழித்து வந்தான். அசுரனின் தொல்லைகளைப் பொறுக்க முடியாத முனிவர்கள், அவனை அழித்து உதவும்படி சிவபெருமானிடம் முறையிட்டனர்.

சிவபெருமான் அவர்களிடம், ‘இன்னும் சிறிது காலம் பொறுத்திருங்கள். என் மகன் விநாயகன் அவனை அழிப்பதற்காகப் பூலோகத்தில் தோன்ற இருக்கிறான். அவன் அரக்கன் காலநேமியை அழித்து, வேள்விப் பணிகள் தொடர உதவி செய்வான்’ என்று அருளினார்.

சிவபெருமானின் திருவிளையாடல் ஆரம்பமானது. விநாயகர் அவதாரம் தோன்றி, அந்த முனிவர்கள் யாகம் செய்யும் காட்டின் ஒருபகுதியில் குளக்கரையில் சிறுபாலகனாக விநாயகர் விளையாடிக் கொண்டிருந்தார்.

காட்டிற்குள் இருந்த அந்த குளத்தில் நீராட வந்த பராசர முனிவர், குழந்தையை கண்டெடுத்து தன் ஆசிர மத்தில் வைத்து வளர்க்கத் தொடங்கினார். ஆசிரமத்தில் வளர்ந்து வந்த விநாயகர், அங்கிருக்கும் மரங்களில் ஏறி விளையாடுவார். அதேபோல் ஒரு மரத்தில் ஏறி விநாயகர் விளையாடியபோது, மரத்தின் அடியில் இருந்த எலியானது, வேர்களைக் கடித்து மரத்தின் பலத்தை இழக்கச்செய்து அந்த மரத்தை சரித்தது. மரத்தின் அடியில் வளை தோண்டி வசித்த பெரிய எலிதான், மரம் கீழே விழ காரணம் என்று விநாயகருக்கு தெரியவந்தது.

அந்த எலியைக் கொல்வதற்காக, தன்னிடம் இருந்த பரசு ஆயுதத்தை எடுத்து எலியை நோக்கி வீசினார் விநாயகர். ஆயுதத்தைப் பார்த்ததும் எலி வளைக்குள் புகுந்து ஓடியது. ஆனால் பரசு ஆயுதம் எலியை விடாமல் துரத்தியது. வளை தோண்டியபடி பாதாளம் வரைச் சென்ற எலி சோர்வடைந்தது. அதற்குமேல் செல்ல முடியாமல், பூமியின் மேற்புறத்தை நோக்கி ஓடி வந்தது. ஆனால் பரசு ஆயுதம் எலியை கொல்லாமல், விநாயகரின் முன்பாக கொண்டு போய் நிறுத்தியது.

விநாயகப் பெருமான் உருவத்தை நேருக்கு நேராகப் பார்த்ததும், அந்த எலிக்கு தான் கந்தர்வனாக இருந்ததும், சவுபரி முனிவரிடம் சாபம் பெற்றதும் நினைவுக்கு வந்தது. விநாயகப் பெருமானிடம் தனது முன் கதையைச் சொல்லி வருத்தப்பட்டது. தன் தவறை மன்னிக்கும்படி வேண்டியது.

எலியின் கதையைக் கேட்டு மனமிரங்கிய விநாயகர், ‘‘மூஷிகனே கவலைப்படாதே! உனக்குச் சாபம் கொடுத்த முனிவரிடம், சாபத்திற்கு விமோற்சனம் கேட்காமல், நான் செய்த தவறுக்கு தாங்கள் கொடுக்கும் சாபத்தை அப்ப டியே ஏற்றுக் கொள்வதாக கூறிவிட்டபடியால், உனக்கு என்னால் சாப விமோசனம் வழங்க முடியாது. நீ கந்தர்வனாக இருந்த போது, என் மேல் அதிக பக்தி கொண்டிருந்தாய். எனவே, நான் உன்னை என் வாகனமாகக் கொள்கிறேன். இதன் மூலம் நான் இருக்கும் இடங்களிலெல்லாம் உனக்கும் மரியாதை கிடைக்கும்’’ என்று அருளினார்.

அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த எலி, விநாயகரை வணங்கி நின்றது. விநாயகப் பெருமானும் மூசிகனை வாகனமாக மாறிய எலி விநாயகரை சுமந்து கொண்டு, முனிவர்களுக்கு தொல்லை கொடுத்து வந்த அசுரன் காலநேமியை அழிக்க உதவியது. அன்றிலிருந்து விநாயகரின் சன்னதியிலும் எலியை வாகனமாக வைக்கப்பட்டது. அன்றிலிருந்து எந்த விதமான காரியங்களிலும் வெற்றி பெறவேண்டுமானால் விநாயகரை அவரது வாகனமான எலியுடன் வணங்கி சென்றால் வெற்றி கிடைக்கும்.







## வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

**(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)**

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**

தொடர்பு கொள்ளவும்:
ஆசிரியர்: நாகராஜன்
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598

# யாகத்தால் பெய்த மழை





அமெரிக்கா மற்றும் சைனா போன்ற நாடுகளில் செயற்கையாக மழையை வரவழைக்கும் கண்டுபிடிப்பை பயன்படுத்தி, அதன் மூலம் தேவைப்படும் சமயத்தில் தற்போதும் ஒரு சில இடங்களில் மழையை பொழிய வைக்கிறார்கள்.

ஆனால் இந்த மழையில் ஒருசில ரசாயன கலவை கலப்பதால் மிகுந்த கெடுபலன் அளிக்கும் விதத்தில் “ரசாயன மழையாக” பொழிவதால் இயற்கைக்கும், மனிதர்களுக்கும் கேடு ஏற்படுவதால் இதனை அதிகமாக பயன்படுத்துவதில்லை.

மழை பொழிவிக்க நமது முன்னோர்கள் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே மிக எளிமையான வழிமுறைகளை கையாண்டுள்ளனர். அதில் ஒன்று யாகம் வளர்த்தல், யாகம் என்பது பலவகையான மூலிகைகளை குறிப்பிட்ட அளவில் நேர்த்தியாக கையாண்டு ஒருவித மூலிகை கலந்த நெருப்பும் புகையையும் வரவழைப்பதாகும்.

இம்முறையை நன்கு கற்றுத் தேர்ந்த வேத பண்டிதர்களால் நடத்தப்படும்போது ஒரு சில அளவீடுகளுக்கு ஏற்ப ஒரு சில பலன்கள் கிடைக்கும். துர் சக்திகளை விரட்ட, ஒரு சில மூலிகைகளை கையாளுவது, வீடு மற்றும் நாடு சுபிட்சமாக இருக்க செய்யப்படும் யாகத்தில் அதற்குரிய மூலிகை மரக் கிளைகளும், மூலிகைகளையும் கையாளுதல், இது போன்று ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு விதமான அளவீடுகள் உள்ளது.

அந்த அளவீடுகளின்படி, மழை வேண்டுமானால் அதற்குரிய விறகு மற்றும் முலிகை பொருட்களை தீயில் போடும்போது அதில் இருந்து வெளிவரும் புகையானது ஆகாயத்தில் சேர்ந்து ஆகாயத்தில் காற்றோடு உலவிக்கொண்டிருக்கும் நீர் சம்பந்தப்பட்ட வாயுவை பிரித்தெடுத்து மழையாக கொட்டச் செய்யும்.



இந்த வழிமுறைகளை மழைக்காக மட்டும் நமது முன்னோர் அதிகமாகப் பயன்படுத்தியது கிடையாது. காரணம், அக்காலத்தில், எந்தவொரு பண்டிகை விஷேசம் போன்றவை நடைபெற்றாலும் முதலில் யாகம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதனால் ஏற்படும் இயற்கை புகையிலிருந்தும், அழிக்கப்படாத இயற்கையின் வளத்தாலும் இந்தியாவில் தேவையான அளவு மழை பொழிவு இருந்தது.

இயற்கை அழிக்கப்பட்டபின்பும், பணம் மட்டுமே குறிக்கோள் என்ற நிலை மக்கள் மனதில் மெல்ல பரவத்துவங்கியதிலிருந்தும், யாகம் என்ற போர்வையில் காசு பார்ப்பதால் யாகத்தில் இடப்படும் முலிகை போன்ற பொருட்களை போலியாக தயாரித்ததாலும், மேற்கண்டவாறு மழை பொழிவதில்லை.

உதாரணத்திற்கு

கேஸ் ஸ்டவ், சிலிண்டர் மட்டும் வைத்துக் கொண்டு சமைக்க முடியுமா? அதை பற்ற வைக்க தீப்பெட்டி அவசியம் அல்லவா? கேஸ்க்கு எரிக்க வைக்கும் தன்மை உண்டு. ஆனால் ஆதாரமான நெருப்பு அல்லது நெருப்பு பொறி கிடைத்தால்தான் அது எரியும் தன்மையை பெறும்.

இதைப்போன்றுத்தான் யாகத்திற்கு மழையை உண்டாக்கும் சக்தி இருக்கிறது. ஆனால் அதற்கு தேவையான பொருட்கள் கிடைக்காததாலும், உண்மையான யாகத்தை நடத்தும் வழிமுறை தெரியாததாலும், இன்று யாகம் என்பது பெயரளவில் மட்டுமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

உன்னதமான பல நல்ல விஷயங்களை, ஒரு சிலர் கேலி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டதற்கு, நாம் மிகுந்த வெட்கமும் வேதனையும்தான் அடையவேண்டும்.

உண்மையிலேயே அற்புதமான இந்து மதக் கருத்துகளும், இறைவழிபாடும் மனித குலம் நன்றாக வாழ வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும், மனித குலத்திற்கு நன்மை செய்வதற்காகவும் மட்டுமே உருவானது, ஆனால் அதை நாமே ஒருசில காரணங்களுக்காக அழித்துவிட்டு, மதத்தை குறைகூறுவதில் எந்த பயனும் இல்லை.

இந்து மதத்தில் காசுக்கும், போலிகளுக்கும் முக்கியத்துவம் வந்ததே அன்றிலிருந்து இந்து மதத்தின் முக்கியத்துவம் அழியத்துவங்கிவிட்டது. வெளிநாட்டினர் நம் மதத்திற்கு தரும் மதிப்பும் மரியாதையில் ஒரு சிறு அளவாது, நாமும் தர முயற்சிப்போம்.

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

# குருவின் கட்டளையால் வீட்டு வேலை செய்த ஆசார்ய பக்தி

ஸ்ரீ வைஷ்ணம் தந்த மிகப் பெரிய மஹான் ஸ்ரீமத் ராமானுஜர், அவரது தலைசிறந்த சீடர்கள் முதலியாண்டானும், கூரத்தாழ்வானுமாவர். ஸ்ரீ ராமானுஜரின் குருவான பெரியநம்பியின் மகள் அத்துழாய் ஒரு நாள் காவேரிக்கு நீராடப் போகப் பிரியப்பட்டுத் தனது மாமியாரைத் துணைக்கு அழைத்தாள்.

“நீ தான் பிறந்த வீட்டிலிருந்து பணிப் பெண்களை ஏராளமாக அழைத்து வந்திருக்கிறாயே, அவர்களில் ஒருவரை அழைத்து போவது தானே? என் பிராணனை ஏன் வாங்குகிறாய்? நான் என்ன உனக்கு வேலைக்காரியா” என்று மாமியார் எரிந்து விழுந்தாள்...

மாமியார் இப்படித் தனது பிறந்த வீட்டின் ஏழ்மையைச் சுட்டிக் காட்டியதால் மனம் வெதும்பிய அத்துழாய் அழுது கொண்டே தனது தந்தை பெரிய நம்பியிடம் வந்து நடந்ததைத் தெரி வித்தாள்.

பெரிய நம்பி “இதற்கும் எனக் கும் என்ன சம்பந்தம்? இது உன் ஜீயர் பொறுப்பு” என்று சொல்ல மனம் உடைந்த அத்துழாய் ஸ்ரீ ராமானுஜரிடம் வந்தாள்.

ஸ்ரீ ராமானுஜர் அத் துழாய் சொன்னதை நிதானமாகக் கேட்டு விட்டு, முதலியாண்டானைச் சுட்டிக் காட்டி “இதோ இருக்கிறான் உன் வேலைக்காரன், பணிப் பெண்ணாக இவனை அழைத்துப் போ” என்றார்.

அத்துழாய் பிரமித்து நின்றாள். முதலியாண்டான் “வா அம்மா உன் இல்லம் செல்லுவோம்” என்று கூறி அவளுடன் சென்றார்.

அன்று முதல் முதலியாண்டான், அத்துழாய் வீட்டு வேலைக்காரனானார். எல்லா வேலை களையும் நிதானமாகவும், மலர்ந்த முகத்துடனும் செய்தார். வீடு பெருக்குதல், தண்ணீர் தெளித்து கோலம் போடுதல், உணவு சமைத்தல், துணி களை துவைத்தல் முதலியவற்றை மிக அழகாகவும் திறமையுடனும் செய்தார். பரம பாகவதரான முதலியாண்டான் இதுரு போன்ற வீட்டு வேலைகளைச் செய்வதைக் கண்டு, அத்துழாயின் வீட்டினர் மிகவும் அஞ்சினர்.



அவர்கள் முதலியாண்டானை வணங்கி “சுவாமி தாங்கள் மிகப் பெரிய மகான், தாங்கள் இதுபோன்று எங்களது வீட்டு வேலைகளைச் செய்து எங்களை மேலும் பாவிகளாக்க நாங்கள் என்ன தவறு செய்தோம்” என்று கேட்டார்கள்.

முதலியாண்டான் “எனக்கு எதுவும் தெரியாது. என் குருநாதர், இங்கு வேலை செய்ய உத்தரவிட்டார் அதை நான் செய்கிறேன்” என்று சொல்லிவிட்டார்.

அத்துழாயின் மாமனார் வீட்டார், முதலியாண்டாரின் குருவான பெரிய நம்பியிடம் சென்று “பெரிய நம்பிகளே... எங்கள் குடும்பத்திற்கு ஏன் பாவத்தை ஏற்படுத்துகிறீர்கள். முதலியாண்டான் எங்கள் வீட்டில் வேலை செய்ய எங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? அவ ரை தயவு செய்து திருப்பி அழைத்துக் கொள்ளுங்கள்” என்று மன்றாடினார்கள்.

“எனக்கு இதைப் பற்றி ஏதும் தெரியாது, நீங்கள் ஆசார்யனைக் கேளுங்கள்” என்று சொல்லி அனுப்பிவிட்டார் பெரிய நம்பி.

அவர்கள் ஸ்ரீராமானு ஜரிடம் சென்று முறையிட் டார்கள். ஸ்ரீராமானுஜர் மெதுவாகப் பதில் சொன்னார்.

“உங்கள் மருமகள் பிறந்த வீட்டிலிருந்து வேலைக்காரனொருவனை அழைத்து வருமாறு உங்கள் வீட்டு எஜமானி உத்தர விட்டாளாம். நானும் முதலியாண்டானும் பரமகுரு வான பெரியநம்பியின் அடிமைகள். முதலி யாண்டானை உங்களுக்குப் பிடிக்கா விட்டால், உங்கள் வீட்டு வேலைக்காரனாக நானே வருகிறேன்” என்றார்.

அவர்கள் வெட்கத்தால் தலைகுனிந்து நின்றார்கள். முதலியாண்டான் மடத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். ஆசார்யன் இட்ட அடிமை வேலையைத் தமக்கு கிடைத்த பெறும் பேறாக கருதினார் முதலியாண்டார். அவரின் குரு பக்திக்கு நிகர் வேறு ஏதுமில்லை.

- A.G.ரவி, 9750719085



## திருவிளக்கில் எத்தனை பொட்டு வைக்க வேண்டும்?

திருவிளக்கின் உச்சி முகங்கள் ஐந்து தீபஸ்தம்பங்களில் இரண்டு இடங்கள் மற்றும் தீப பாதத்தில் ஒன்று ஆகிய மொத்தம் எட்டு இடங்களில் சந்தனப்பொட்டும் அதன் மேல் குங்குமமும் வைக்க வேண்டும். பொட்டு வைக்கும் போது ஆதிலட்சுமி, சந்தான லட்சுமி, வித்யாலட்சுமி, தனலட்சுமி, தான்யலட்சுமி, கஜலட்சுமி, வீர லட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரை தியானிக்க வேண்டும். இதனால் வீட்டில் ஐஸ்வர்யம் பெருகும். எட்டு பொட்டுகள் வைப்பதற்கு தத்துவரீதியான காரணமும் உண்டு. நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்கள் சூரியன் சந்திரன் ஆகிய கண்கண்ட தெய்வங்கள் ஆத்மா என்னும் உயிர் தத்துவம் ஆகியவற்றை இந்த பொட்டுகள் குறிக்கின்றன.


ஆன்மிகமலர் .காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!
ஆன்மிகமலர் .காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!



# அமிர்தத்திற்கு நிகரான கடுக்காய்

நமது உடலில் நோய் தோன்றக் காரணம் என்னவெனில், உஷ்ணம், காற்று, நீர் ஆகியவை தன்னளவில் இருந்து மிகுதல் அல்லது குறைவதால் தான். இதனாலேயே நோய் தோன்றுகிறது.

உஷ்ணத்தால் பித்த நோய்களும், காற்றினால் வாத நோய்களும், நீரால் கப நோய்களும் உண்டாகின்றன. நமது தேகத்தை நீட்டித்து, ஆயுளை விருத்தி செய்ய திருமூலர் சித்தர் எளிய வழியை கூறுகிறார்.

ஒருவனுடைய உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் தூய்மை செய்யும் வல்லமை கடுக்காய்க்கு உண்டு என்று குறிப்பிடுகிறார் திருமூலர்.

கடுக்காய்க்கு அமுதம் என்றொரு பெயரும் உண்டு. தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமிர்தத்திற்கு ஒப்பானது கடுக்காயாகும்.

“பெற்ற தாயைவிட கடுக்காயை ஒருபடி மேலானது என்று கருதுகின்றனர் சித்தர்கள். கடுக்காய் வயிற்றில் உள்ள கழிவுகளை யெல்லாம் வெளித்தள்ளி, அவனுடைய பிறவிப் பயனை நீட்டித்து வருகிறது.

கடுக்காயின் சுவை துவர்ப்பாகும்.

நமது உடம்புக்கு அறுசுவைகளும் சரிவரத் தரப்பட வேண்டும். எச்சுவை குறைந்தாலும் கூடினாலும் நோய் வரும். நமது அன்றாட உணவில் துவர்ப்பின் ஆதிக்கம் மிகவும் குறைவு.

துவர்ப்பு சுவையே ரத்தத்தை விருத்தி செய்வதாகும். ஆனால் உணவில் வாழைப்பூவைத் தவிர்த்து பிற உணவுப் பொருட்கள் துவர்ப்புச் சுவையற்றதாகும். பின் எப்படி ரத்த விருத்தியைப் பெறுவது?

அன்றாடம் நமது உணவில் கடுக்காயைச் சேர்த்து வந்தால், நமது உடம்புக்குத் தேவையான துவர்ப்பைத் தேவையான அளவில் பெற்று வரலாம்.

கடுக்காய் அனைத்து நாட்டு மருந்துக் கடைகளிலும் கிடைக்கும். கடுக்காயை வாங்கி உள்ளே இருக்கும் பருப்பை எடுத்து விட்டு, நன்கு தூளாக அரைத்து வைத்துக் கொள்ளவும்.

இதில் தினசரி ஒரு ஸ்பூன் அளவு இரவு உணவுக்குப்பின் சாப்பிட்டு வர, நோயில்லா நீடித்த வாழ்க்கையைப் பெறலாம்.

கடுக்காய் குணப்படுத்தும் நோய்கள்:

கண் பார்வைக் கோளாறுகள், காது கேளாமை, சுவையின்மை, பித்த நோய்கள், வாய்ப்புண், நாக்குப்புண், மூக்குப்புண், தொண்டைப்புண், இரைப்பைப்புண், குடற்புண், ஆசனப்புண், அக்கி, தேமல், படை, தோல் நோய்கள், உடல் உஷ்ணம், வெள்ளைப்படுதல், மூத்திரக் குழாய்களில் உண்டாகும் புண், மூத்திர எரிச்சல், கல்லடைப்பு, சதையடைப்பு, நீரடைப்பு, பாத எரிச்சல், மூல எரிச்சல், உள்மூலம், சீழ்மூலம், ரத்தமூலம், ரத்தபேதி, பௌத்திரக் கட்டி, சர்க்கரை நோய், இதய நோய், மூட்டு வலி, உடல் பலவீனம், உடல் பருமன், ரத்தக் கோளாறுகள், ஆண்களின் உயிரணுக் குறைபாடுகள் போன்ற அனைத்துக்கும் இறைவன் அருளிய அருமருந்தே கடுக்காய்.

இதை பற்றி சித்தர் கூறும் பாடல்...

“காலை இஞ்சி
கடும்பகல் சுக்கு
மாலை கடுக்காய்
மண்டலம் உண்டால்
விருத்தனும் பாலனாமே.”

காலை வெறும் வயிற்றில் இஞ்சி, நண்பகலில் சுக்கு, இரவில் கடுக்காய் என தொடர்ந்து ஒரு மண்டலம் (48 நாட்கள்) சாப்பிட்டுவர, கிழவனும் குமரனாகலாம் என்பதே இந்தப் பாடலின் கருத்தாம்.

எனவே தொடர்ந்து கடுக்காயை இரவில் சாப்பிட்டு வர நோய்கள் நீங்கி இளமையோடு வாழலாம். கடுக்காய் வீடுகளில் கண்டிப்பாய் இருக்க வேண்டிய பொக்கிஷமாகும்.

– குமார், சித்தர் மூலிகை சாலை.

## மருத்துவ உலகின் சர்ப்பங்களின் குறியீடு ரகசியம்



இரண்டு பாம்புகள் (சர்ப்பங்கள்) ஒரு தடியை பிண்ணிக் கொண்டிருக்கும் உருவம் பொறிக்கப்பட்ட குறியீட்டை மருத்துவ மனைகளிலும், மருத்துவர்களின் வாகனம் மற்றும் அவர்களின் அறிமுக அட்டைகளிலும் காணலாம்.

அந்த குறியீடு மருத்துவ துறையின் குறியீடாக உலகம் முழுவதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அது போன்ற குறியீடு சிவன் கோயில் மற்றும் அம்மன் கோயில் வளாகங் களிலும், அரச மரங் களின் அடியிலும் கற் சிலைகளாக நிறுவப்பட்டிருப்பதை காணலாம். ஆலயங்களில் நிறுவப்பட்டி ருக்கும் இத்தகைய சர்ப்ப பிரதிஷ்டைகளை தினமும் ஒரு முறை தரிசித்து வந்தால் அன்றைய தினம் நாம் செய்த கர்மங்கள் அனைத்தும் நம்மை விட்டு நீங்கிவிடும். இந்த கற்சிலைகளைப் பார்த்துதான் மருத்துவத்துறை தங்கள் குறியீட்டை அமைத்துக்கொண்டுள்ளது.



இந்த சர்ப்ப பிரதிஷ்டைகளை தினமும் தரிசித்து வந்தால் தீராத வியாதிகள் எல்லாம் தீரும் என்பது பலருக்கும் தெரியாத ரகசியம்.

நம் முன்னோர்கள் தினமும் இந்த சர்ப்ப பிரதிஷ்டைகளை (இரண்டு பாம்புகள் பிண்ணிக்கொண்டிருப்பது போன்ற கற்சிலைகள்) கோயில்களில் தரிசித்து வந்தார்கள். இதனால் நல்ல ஆரோக்கியமான சூழ்நிலையில் அவர்கள் இருந்தார்கள்.




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
♦♦♦
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070

# ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி

ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி என்பது ஐந்து பெண் மக்களைப் பெறுவதைக் குறிக்கவில்லையாம்..!

கீழ்கண்ட விபரப்படிக்கான ஐந்து பேரைக் கொண் டிருப்பவன், அரசனே ஆனாலும் கூட அவனது வாழ்க்கை வே அழிவை நோக்கி போகு என்பதுதான் உண்மையான அர்த்தம்

1. ஆடம்பரமாய் வாழும் தாய்,
2. பொறுப்பில்லாமல் வாழும் தந்தை,
3. ஒழுக்கமற்ற மனைவி,
4. ஏமாற்றுவதும் துரோகமும் செய்யக்கூடிய உடன் பிறந்தோர் மற்றும்
5. சொல் பேச்சு கேளாத பிடிவாதமுடைய பிள்ளைகள் என்பதாகும்..

# தெய்வத்தின் மீது சுமத்தப்படும் குற்றம்

மக்கள் பொதுவாக வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளையெல்லாம் தங்களுடன் வாழ்பவர்கள் மீதோ, அல்லது அது தவறினால் தெய்வத்தின் மீதோ சுமத்துகிறார்கள். அல்லது புதிதாக அவர்கள் ஏதோ பேய் பிசாசு என்று கற்பித்துக் கொண்டு, அதைத் தலைவிதி என்று சொல்கி றார்கள். விதி என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்கிறோம். நமது விதியை நாமே வகுத்துக்கொள்கிறோம். எனவே, அதன் பொருட்டுத் தூற்றுவதற்கும் ஒருவருமில்லை; பாராட்டுவதற்கும் ஒருவருமில்லை. நான் அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்தத் துன்பம், என்னுடைய சொந்தச் செயல்களாலேயே உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒரு நிலையே, என் ஒருவனால் மட்டுமே அது நீக்கப்பட வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்.....

# செங்கல்லின் மகிமை

குழந்தைகள் அடிகடி கீழே விழுந்துக் கொண்டே இருந் தால், செங்கலால் திருஷ்டி சுற்றி, பிறகு அந்த திருஷ்டி கழித்த செங்கல்லை போட்டு உடைத்து அந்த மண்ணை பூமிதாயை மனதில் நினைத்து கொண்டு, செங்கல் மண்ணை குழந்தையின் நெற்றியில் வைத்தால் அந்த குந்தைகளுக்கு திருஷ்டியால் உண்டாகும் பாதிப்பு குறையும்.

# குழந்தைகள் படிக்க...

நன்றாக படிக்கும் குழந்தைகள் திடீர் என்று படிப்பில் ஆர்வம் குறையும். அதேபோல பெரியோர்களுக்கு கடன் தொல்லை போன்றவை இருந்தால், விநாயகரின் ஆலயத்தில் அவர்களின் பெயரில் அர்ச்சனை செய்து, தேங்காய் எண்ணையையும், தன் குலத்தை காக்கும் குலதெய்வத்திற்கு பிடித்தமான விளக்கெண்ணையும் ஒன்றாக கலந்து, அர்ச்சனை செய்த தேங்காயில் ஊற்றி தீபம் ஏற்றினால் பிரச்சனைகள் விலகும்.



# சூரியவம்சம்

அயோத்தியை ஆண்ட வம்சம் சூரியவம்சம். நீதி நேர்மை தவங்மல் ஆட்சிபுரியும் நல்லமன்னர்கள் பிறந்த குலம் இது. எவ்வளவு துன்பம் நேர்ந்தபோதும், உண்மையிலிருந்து

விலகாமல் சத்தியம் பேசிய அரிச்சந்திரன், சனிதோஷம் போக்கும் நளச்சக்கரவர்த்தி, பசுக்களுக்கு வாழ்வு தந்த திலீபச்சக்கரவர்த்தி, தசாவதாரங்களில் ஒருவராக வணங்கப்படும் ராமபிரான் ஆகியோர் சூரியகுலத்தில் தோன்றியவர்கள். கொடை வள்ளல் கர்ணனும் சூரியனின் பிள்ளையே. சூரியனை வழிபட்டவர்கள் சூரியகுலத் தோன்றல் களான இந்த மன்னர்களின் நல்லாசியையும் பெறுவர் என்பது உறுதி.

விளம்பர விபரம்
அரை பக்க விளம்பரம்
ரூ.2500
முழு பக்க விளம்பரம்
ரூ.5000
பேக்கேஜ் விளம்பரங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்
விளம்பர ஏஜென்சிகளும் வரவேற்கப்படுகிறார்கள்

கோவில்களில் நடைபெறும், நடைபெற்ற, நிகழ்ச்சிகளை இலவசமாக பிரசுரிக்கிறோம். நிகழ்ச்சி பற்றி முழு தகவலையும் கோவிலின் புகைப்படத்தையும் அனுப்பிவைக்கவும்

விளம்பர தொடர்புக்கு:
8939499598 / 9677159070
aanmeegamalar@gmail.com

உங்களைத்தான் தேடுகிறோம்...

ஆன்மீகமலர்.காம்
இணையதளத்தின் மூலம் வெளிவரும் ஆன்மீகமலர்.காம் மெயில் புத்தகத்தில் நீங்களும் துணை ஆசிரியராக வாய்ப்பளிக்கிறோம்...
உங்கள் ஊரில் உள்ள கோயில், மடம், சித்தர்கள், ஆன்மீக சேவை புரியும் அன்பர்கள், உழவாரப்பணி செய்யும் அன்பர்கள், கோயிலின் சிறப்புகள் போன்றவற்றை தொகுத்து வழங்க விருப்பமிருந்தால் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
எங்களுடன் நீங்களும் இணைந்து ஆன்மீக சேவை புரியலாம்...

தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8939499598
aanmeegamalar@gmail.com



# ஜோதிர் லிங்கங்கள்

**1. அருள்மிகு ராமநாதர் திருக்கோயில், ராமேஸ்வரம்**

சிறப்பு: கங்கை நீரை கொண்டு வந்து அபிஷேகம் செய்வது வழக்கம். இங்கு மட்டும் கடலில் எந்நாளும் என்நேரமும், நீராடலாம். ஆஞ்சனேயர் கொண்டு வந்த லிங்கத்திற்கும், சீதை மணலால் செய்த லிங்கத்திற்கும் ராமர் பூஜை செய்தது சிறப்பு.

**2. அருள்மிகு மல்லிகார்ஜுனேஸ்வரர் திருக்கோயில், ஸ்ரீ சைலம்**

சிறப்பு: நந்தியே மலையாக சிவனை தாங்குகிறார். விநாயகர் சித்தி புத்தியரை மணந்த தலம்.

**3. அருள்மிகு பீமசங்கரர் திருக்கோயில், பீமசங்கரம், மஹாராஷ்டிரம்**

சிறப்பு: கருவறைக்கு முன் நந்திக்கு பதில் ஆமை. அவசரப்படாமல் வழிபட வேண்டும் என்பதை உணர்த்துவதற்காக.

**4. அருள்மிகு திரியம்பகேஸ்வரர் திருக்கோயில், மஹாராஷ்டிரம்**

சிறப்பு: சுயம்பு லிங்கம். லிங்கக் கருவறையில் எப்பொழுதும் நீர் ஊறுகிறது. சிவனே மலையாக இருப்பதாக தலம், கோதாவரி உற்பத்திக்கும் ஸ்நானம்.

**5. அருள்மிகு குஸ்ருணேஸ்வரர் திருக்கோயில், குஸ்ருணேஸ்வரம்**

சிறப்பு: அம்பிகை குங்குமப்பூவால் வழிபட்ட தலம். (குஸ்ருணம்குங்குமம்) கருவறையின் சுவற்றில் அன்னையின் திருவுருவம் உள்ளது.

**6. அருள்மிகு சோமநாதர் திருக்கோயில், ப்ராபாச பட்டினம், குஜராத்**

சிறப்பு: கடற்கரை தலம். சந்திரன் சாபம் தீர்த்த தலம். அமாவாசை கூடிய திங்கட்கிழமை தரிசனம் மிகவும் சிறப்பு. மிகச்சிறிய சுயம்பு மூர்த்தி.

**7. அருள்மிகு நாகநாதர் திருக்கோயில், குஜராத்**

சிறப்பு: தெற்கு நோக்கிய லிங்கம். நாமதேவர் வணங்குவதற்காகத் திரும்பிய கோலம்.

**8. அருள்மிகு ஓம்காரேஷ்வரர் (அமலேஸ்வரர்) திருக்கோயில், ஓங்காரம், மத்திய பிரதேசம்**

சிறப்பு: மலைமுகட்டில் சுயம்புலிங்கம். பாணாசுரன் ஒவ்வொரு நாளும் 2000 லிங்கங்களை பூஜித்து நர்மதை நதியில் விடப்பட்டவையே சாளக்கிராமங்களாக மாறியதாக வரலாறு.

**9. அருள்மிகு மஹாகாளர் திருக்கோயில், உஜ்ஜயினி**

சிறப்பு: கார்த்திகை பவுர்ணமி தரிசனம் விசே ஷம். 5 அடுக்கு கோயில். தோல் வியாதிகளை நீக்கும் கோடித் தீர்த்தம்.

**10. அருள்மிகு வைத்தியநாதர் திருக்கோயில், பீகார்**

சிறப்பு: பல மாநிலங்களில் வைத்தியநாதம் இருப்பதாகக் கூறினாலும் சிவபுராணத்தில் குறிப்பிட்டுள்ளது இதுவே. திருமாலின் லீலையால் ராவணன் கொண்டுவந்த லிங்கம் தங்கி விட்ட தலம்.

**11. அருள்மிகு விஸ்வநாதர் திருக்கோயில், காசி**

சிறப்பு: இங்கு இறப்பவருக்கு ஈசனே தாரக மந்திரம் ஓதுகிறார். தாங்களே அபிஷேகம் செய்யலாம். சிவராத்திரி தரிசனம் விஷேசம். ராமேஸ்வரத்திலிருந்து கொண்டு வந்த மணலை த்ரிவேணியில் கரைப்பது வழக்கம்.

**12. அருள்மிகு கேதாரேஸ்வரர் திருக்கோயில், கேதார்நாத்,**

சிறப்பு: இமயமலையில் சுயம்பு பனி லிங்கம். அம்மன் ஈசனின் இடப்பாகம் பெற்ற தலம். 6 மாத மானிட பூஜை. 6 மாதம் தேவ பூஜை நடைபெறும்.

# விருந்தாளிக்கு குடிக்க தண்ணீர் கொடுப்பதன் காரணம்

முன்பெல்லாம் யார் வீட்டிற்கு வந்தாலும் குடிக்க தண்ணீர் கொடுக்க சொல்வார்கள் நமது முன்னோர்கள். புதிதாக வருபவர் தெரிந்தவராக இருந்தாலும், தெரியாதவராக இருந்தாலும் குடிக்க தண்ணீர் கொடுத்த பின்பே மற்ற விஷயங்கள் பேசுவது மற்றும் அவருக்கு சாப்பிட ஏதாவது கொடுப்பது போன்ற நடைமுறை இருந்தது.

இவ்வாறு வருபவர்களுக்கு முதலில் தண்ணீர் கொடுப்பதற்கு மிகச் சிறந்த காரணங்கள் உள்ளது. தண்ணீருக்கு மனிதர்களின் மனநிலையை மாற்றும் அற்புதமான சக்தி இருக்கிறது. ஒரு மனிதனின் கோப தாபத்தையும், வெறுப்புணர்ச்சியையும் மாற்றும் ஆற்றல் தண்ணீருக்கு உள்ளது. ஏதாவது சண்டை சச்சரவு வரும்போது ஒருவரையொருவர் ஏச்சுப் பேச்சு நடத்தும் போது அவர்களை விலக்க வருபவர் “முதல்ல தண்ணி குடிப்பா அப்புறம் பேசலாம்” என்று கூறுவார். சண்டையிடும் நபர் தண்ணீர் குடித்ததும் தனது பேச்சில் ஒரு வித சாந்தம் வெளிப்படும்.

இதன் அடிப்படையில்தான், வீட்டிற்கு வருபவர்களுக்கு தண்ணீர் கொடுக்கும் பழக்கத்தை நமது முன்னோர் உருவாக்கி வைத்தனர். வீட்டிற்கு வருபவரின் மனநிலை எதுவாக இருந்தாலும் சரி, அவர்களின் எண்ணங்கள் எதுவாக இருந்தாலும் சரி, தண்ணீரை குடித்தால் அந்த கெட்ட தாக்கத்தின் பாதிப்பு இல்லத்தை பாதிக்காது.



Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699



# மனதை அலைபாய விடாமல் தடுப்பது யோகம்

- வாழ்க்கை இன்னதென்று அறியாமல், குறிக்கோள் ஏதும் இல்லாமல் மிருகங்கள் வாழ்கின்றன. மனிதனும் அப்படி விலங்கு வாழ்க்கை வாழ்வது அர்த்தமில்லை.
- அடுத்தவர்களின் குறைகளைக் களைவதில்தான் நம் கவனம் அனைத்தும் செல்கிறது. நம் குறை களை முதலில் களைய முற்படுவதே பயனுடைய தாகும். நம்மீது குற்றம் என்பதே இல்லை என்ற உயரிய நிலையை எட்டுவதே நம் கடமையாகும்.
- பெற்றோரை ஒவ்வொருவரும் மதிக்க வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் நீங்கள் தாய் தந்தையர் ஆகும்போது, உங்களை உங்கள் பிள்ளைகள் மதிப்புடன் நடத்துவார்கள்.
- மண்ணில் பிறக்கும் உயிர்களில் மனிதப்பிறவி தனிச்சிறப்புடையது. கடவுளின் கரங்களில் இருந்து இவ்வரிய கொடையாகிய மனிதப்பிறவி என்னும் வெகுமதியை பெற்ற நாம், அதன் அருமையை உணராமல் வாழ்ந்தால், பெரும் பாவம் செய்தவர்களாகி விடுவோம்.
- மனதை அலைபாய விடாமல் தடுப்பது யோகம். அவ்வாறில்லாமல் அலைபாய விட்டால் உண்டாகும் ரோகம். இன்றைய மனிதன் புலனடக்கம் இல்லாததால் உலக சுகங்களில் மூழ்கி தன்னையே இழந்து கொண்டிருக்கிறான்.
- சிலர் காலை மடக்கி உட்காருதல், ஒற்றைக் காலில் நிற்றல் இதைத்தான் யோகாசனம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையான யோகம் என்பது உயர்ந்த அன்புணர்வோடு இறைவனோடு நம்மை இணைத்துக் கொள்வதாகும்.
- அன்பால் இதயத்தை நிறைத்திருக்கும் மனித னையே இறைவன் விரும்புகிறார். உண்மையோடும், பக்தியோடும் இருக்கும் மனிதர்களை இறைவனே தேடிவந்து விடுவார். அவர்களின் தேவைகளை நிறைவேற்றி அருள்வார்.
- தாய் தன் குழந்தைகளின் தேவைகளை கேட் காமலே, வலிந்து செய்வது போல நாமும் பக்தியில் இறைவனின் குழந்தைகளாக மாறுவோம்.
- தனித்து வாழாதீர்கள். ஒதுங்கி போகாதீர்கள். மனம் விட்டு பேசுங்கள். ஒற்றுமை உணர்வுடன் எல் லோருடனும் உறவாடுங்கள். பரஸ்பர அன்பினால் நம் வாழ்வு ஒளியுடையதாகும் என்ற உண்மையை உணருங்கள்.